# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 12-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 10-ம் இலக்கம்


## "அர்ச். சூசையப்பரின் சிறியநாய்"

(முன்தொடர்ச்சி)

குருவானவருடன் கூடிக்கொண்டு பிணியாளரைத் தரிசித்துவருஞ் சமயங்களிலே விசுவாசிகள் அவர் தங்களை ஆசீர்வதித்தருளும்படி வேண்டிக்கொள்வார்கள். பிறதரோ, அவர்கள்வேண்டுகோளுக்கிணங்காமல் குருவானவரைநோக்கி: "சுவாமி ஆசீர்வதிக்கும்சுதந்திரம் தேவரீருக்கே உரியது"என்பார்.

அர்ச். பிரான்சீஸ்கு அசிசியார் சபைக்குச் சேர்ந்தவரான பிறெடெறிக்என்னும் குருமுனிவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டங் கட்டுவதற்கு ஆவசியகமான ஆரம்ப முயற்சிநடைபெற்றுவருகின்றது. இவர் ஓர்முறை அந்திரேபிறதரைக்கண்டு சம்பாஷிக்கச்சென்றபோது "அந்திரேபிறதர் பெரிய அர்ச்சியசிஷ்டர்; அத்தகைய அர்ச்சியசிஷ்டதனம் அடைய என்னசெய்து வருகிறீர் என்று அவரைஉசாவி அறியும்பொருட்டு வந்திருக்கிறோம்" என்றார்.

பிறதர் வாசமாயிருந்துவந்த அறைக்கு அவரைக் கூட்டிக்கொண்டு போனார்கள். வெளிகொண்டுவந்த பிறதரைக்கண்டதும் குருவானவர் அவர் முகதாவிலே முழந்தாளில்வீழ்ந்து "பிறதர் அந்திரே, உமது ஆசீர்வாதத்தை எனக்குத்தந்தருளும்" என்றார். "பிதாவே தேவரீரை நானல்ல, என்னையே தேவரீர் ஆசீர்வதித்தருளவேண்டியது"என்று பிறதர் அவர் சந்நிதியிலே முழந்தாட்படியிடலானார். இருமகாத்துமாக்களுடையவும் இந்தத் தாழ்ச்சிப் போட்டி ஒருவரையொருவர் சகோதரவாஞ்சையாய்த் தழுவிக்கொண்டெழும்பும் முடிவுக்கு வரலாயிற்று.

சாதாரண சனங்களும் "அந்திரேபிறதர் அர்ச்சியசிஷ்டர்; அவர் நோயாளிகளைக் குணப்படுத்திவிடுவார்" என்று சொல்லிவருவார்கள். அர்ச்சியசிஷ்டதனம் சட்டென்று அடைந்துகொள்ளக்கூடிய தொன்றல்ல என்பது அவர்தாமே வெளியிட்ட அபிப்பிராயம். அவர் தம்மைஒறுத்துச் செயித்துத் தேவதிருவுளத்தைச் சுமுத்திரையாய் அநுசரித்தே உத்தமதனத்தின் உச்சநிலையை அடையலானார். திவ்விய இஸ்பிரீத்துசாந்து சருவேசுரனால் எப்பொழுதும்நடத்தப்பட்டுவந்த அர்ச். சூசையப்பர் தமது அப்போஸ்தலரான அந்திரேபிறதரும் அவரால் நடத்தப்படஅநுக்கிரகம் அடைந்தருளினார். "திவ்வியஇஸ்பிரீத்துசாந்துவானவர் அப்போஸ்தலர்களுக்குச் செய்தருளியதை நமக்கும் செய்தருளுவா"ரென்று சொல்லிவருவார்.

பரலோகத்திலே மகிமையின் பங்கைச் சுகிக்கவேண்டியவர்கள் இகலோகத்திலே சிலுவையின் பங்கைச் சுமக்கவேண்டும். எவர்கள் தம்மை அதிஉதாரமாய் நேசிக்கிறார்களோ, அவர்களுக்கே அதிபாரமான சிலுவையைச் சருவேசுரன் அனுப்புகிறார். எங்கள் புதுமையாளருக்குச் சிலுவைகுறைவாயிருந்ததில்லை. அதன்பெறுமதியை அவர்அறியாதிருந்ததுமில்லை. "துன்பதுரிதங்களின் பெறுமதியை அறியப்பெறுவோமேயாகில் அவைகளை அனுப்பியருளும்படி முழந்தாளில்விழுந்து தேவனை இரந்துகேட்போம்"என்பார். எப்பொழுதும் ஏதோ சரீர துன்ப நோக்காட்டை அநுபவித்துவரலானார். எங்கும் எப்போதும் நல்லாரைப் பகைத்து உபத்திரியப்படுத்தும் பொலலாரும் உண்டன்றோ? புதுமை செய்கிறதாகநடிக்கிற கிழட்டுமூடன் என்று தீயோர்கள் அவரைப் பரிகசிப்பார்கள். அவர்மீது ஆவலாதிசுமத்த ஆனகாரணம் அகப்படும்படி நோய்ப்பட்டஸ்திரீகளை அவர்பார்த்துப் பரிகரிக்கும்படி அவரிடம்அனுப்ப முயன்றாரும் உண்டு. அவர்களை ஏவிவிட்ட பிசாசே அவர்மேலே தீராவன்மஞ் சாதித்து அவரைப் பெரிதும்சோதித்து வாதித்துவந்தது. ஓர்முறை அவருடைய கால்ஒன்றைப் பிடித்து நெரித்துவிட்டது. இன்னோர்முறை பன்னிருஅடி ஆழமான இடத்திலே தலைமோதி விழும்படி தூக்கிஎறிந்துவிட்டது. தமது சயனஅறை தமது உத்தரிப்புஸ்தலம் என்று அவர்சொல்லி வருவார். சிலகாலம் இராநாலுசாமமும் பெரும் ஊளைச்சத்தம் சந்தடி செய்து அவர்கண்ணோடுகண்மூடவொட்டாது கரியமிருகவடிவாய் அவர் அறையிற்தோன்றி மிரட்டித் திகிலுறுத்தப் பிரயாசப்பட்டது. அர்ச். சூசையப்பர் தம்மைக் கருவியாகக்கொண்டு விளைவித்த, விளைவிக்க இருக்கும் நன்மைகளை காய்மகாரம்பிடித்த நரகப்பிசாசின் கோபாதிக்கத்துக்குக் காரணம்என்று எண்ணி சதெல்லாவற்றையும் அவர் பொருட்படுத்தியதில்லை. வாயிற்காப்பாளராயுள்ள பிறதர் பலவித நோயாளரை ஏற்றுக்கொள்வது, கல்லூரி மாணாக்கர்களுக்கும், அவர்களைத் தரிசிக்கவரும் பெற்றாராதியோர்க்கும் முற்றும்பொருந்தாத விஷயம்என்று உடன்துறவிகளோடு முறைப்பட்ட அநேகரது முறையீடு மேற்றிராணியாருக்குக் கொண்டுபோகப்பட்டது. நோயாளரை நீர் ஏற்றுக்கொள்ளப்படாதென விலக்கிவிடின் பிறதர் விலக்கியபிரகாரம் அமைந்துநடப்பாரோஎன்று அவர் வினாவினார். உடனைக்குடனே அமைந்துவிடுவார்என்று விடைபகர்ந்தார்கள். "நன்று! பிறதரை அவர்பாட்டில் விட்டுவிடுங்கள்; இஃது தேவனால் நிகழ்ந்ததேயாகில் தானாகவிழுந்து அற்றழிந்துவிடும்என்ற சாரப்படச் சொல்லிவந்தவர்கள் வாயெடுக்காமல் வந்தவழியே மீளும்படி செய்துவிட்டார். சருவேசுரனும் தமது தொண்டரின் பிரமாணிக்கத்தைப் பரிசோதிக்கத் திருவுளமாகி, ஆத்தும அந்தரங்க சீவியத்துக்குரிய ஞானஆறுதல் ஞானஆனந்தத்தைநீக்கி ஞான அந்தகாரம் அவரைச் சூழச்செய்தருளினார்.

இத்தகைய விவிதசோதனை துன்பமாகிய அக்கினியிலே புடமிடப்பட்டு, மாற்றுயர்ந்த ஞானத்தங்கமாக மிளிரத்தொடங்கிய அந்திரேபிறதர் அர்ச். சூசையப்பரின்மீது தாம்கொண்டிருக்கும் உருக்கமானபத்தியையும், உறுதியான நம்பிக்கையையும் தமதுகண்காணிப்புக்குள்ளாகிய மாணாக்கரோ, உடன்துறவிகளோ, தம்மைத் தேடிவரும் பன்னூற்றுக்கணக்கான விசுவாசிகளோ அனைவருமே கொண்டிருக்கும்படி அவர் செய்துவந்த நானாவித பிரத்தியட்ச முயற்சிகளுள்ளே முதன்மைவாய்ந்து விளங்குவது அவர்எழுப்பிய அர்ச். சூசையப்பரின் மகாதேவாலயமாகும்.

(தொடரும்)

---

## ஹங்கேரியும் நாஸ்திக பிரசாரமும்

ஹங்கேரியில் ஆட்சிநடத்தும் நாஸ்திககம்யூனிஸ்தஅதிகாரிகள் இத்தனைவருடகாலமாக மும்முரமாய் நாஸ்திகபிரசாரம் செய்துவந்தபோதிலும் அந்நாட்டில் இன்னுமே பலன்கொண்டிருக்கும் சமயசெல்வாக்கைக் குறைத்துவிடுமாறு தற்போது முன்னிலும் அதிகங்கூடிய நாஸ்திக பிரசாரம் நடத்தப்படவேண்டுமென்று "ரார்ஸா டால்மி ஸெம்லி" என்ற ஹங்கேரிய கம்யூனிஸ்தகட்சி வெளியீடு அறைகூவியிருக்கின்றது. இதுவரை சமயத்துக்கெதிராக வெளியிடப்பட்டுள்ள 50 புத்தகங்களும், 150 கட்டுரைகளும் முற்றாகவே போதாவென்றும், 1956-ம் ஆண்டு நடைபெற்ற எதிர்ப்புரட்சிக்குப்பின் அங்குநாஸ்திகசம்பந்தமாக எதுவுமே வெளியிடப்படவில்லையென்றும் அவ்வெளியீடு முறையீடு செய்திருக்கின்றது. மிகவும்மேம்பட்ட விஞ்ஞானிகள், தொழில்நுட்ப நிபுணர்கள் தானும் இன்னுமே கிரமமாகக் கோவிலுக்குப் போவதைக் காணக்கூடியதாய் இருக்கிறதேயென்ற இகழ்ச்சிக்கேதுவான உண்மையே நாஸ்திக பிரசாரம் தோல்வியடைய முதன்மையான காரணமென்று அது கூறியிருக்கின்றது.

---

## சங். அல்போன்ஸா கன்னியாஸ்திரி

சங். அல்போன்ஸா கன்னியாஸ்திரியின் முத்திப்பேறுபெற்ற பட்டத்திற்கான மேற்றிராசன விசாரணை முடிவையடுத்திருக்கின்றது. இதுவரை விசாரணை நீதிமன்றம் ஏறக்குறைய ஒவ்வொன்றும் ஐந்துமணித்தியாலங்கள் நீடித்திருந்த 584 கூட்டங்களை நடத்தியிருக்கின்றது. கூட்டங்களின் நடவடிக்கைகளெல்லாம் ஒவ்வொன்றும் 26வரிகளைக்கொண்ட 7,000 பக்கங்களில் அடங்கியிருக்கின்றன. எல்லாம் மலையாளபாஷையில் எழுதப்பட்டுள்ளன. ரோமாபுரியில் அங்கீகரிக்கப்படக்கூடிய பாஷைகள் லத்தீனும், இத்தாலியமும், பிரான்ஸியமுமே. அதனால், இந்த 7,000பக்கங்களும், புதுமைகள்சம்பந்தமான மற்றும் குறைந்தபட்சம் 3,000 பக்கங்களும் இம்மூன்று பாஷைகளுள் ஒன்றிலே — இவைகளில் அதிகமாக விரும்பப்படும் லத்தீன் பாஷையிலே மொழிபெயர்க்கப்படவேண்டியிருக்கின்றன. மொழிபெயர்க்கும் வேலை ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது.

## போர்த்துக்காலின் இராக்கினியாகிய

# வெற்றிமாதா

போர்த்துக்கால்தேசத்தைத் தேவமாதாவின் நாடென்றே அழைக்கலாம். ஏனெனில், முழுத்தேசமும் அவளின் மகிமைக்காகவே வெற்றிகொள்ளப்பட்டு அர்ப்பணிக்கப் பெற்றிருப்பதாகத் தெரிகிறது. போர்த்துக்கால் தேவமாதாவுக்கு — வெற்றிமாதாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சரித்திரப்பின்னணியைத் தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

போர்த்துக்காலின் முதல்அரசரான தொன்அல்போன்சோ ஹென்றிக் தேவமாதாவின்பேரில் மிகுந்தபக்தியுடையவர். திமிர்வாதக்காரனாயிருந்த இவர் தேவமாதாவின் கருணையினால் அற்புதமாகக் குணமாக்கப்பட்டார் என்றும், அதற்குஉபகாரமாகத் தமது மகிமைக்காகப் பலநாடுகளை வெற்றிகொள்ளும்படி மாதாஅவரைக்கேட்டுக்கொண்டாளென்றும் சரித்திரம்கூறுகின்றது. அஞ்ஞானிகள், துலுக்கர், சோனகருக்கெதிராகக் கத்தோலிக்க மக்களின் ஆதரவோடு இவர்யுத்தஞ்செய்து பெற்றவெற்றிகள் தேவமாதாவுக்கு நன்றிக்காணிக்கைகள் ஆகின என்பது சரித்திரவாயிலாகக் காணக்கிடக்கின்றது. தொன்அல்பொன்சோ அரசர் தமக்குக்கிடைத்த வெற்றிகள் யாவும் தேவதாயாராலேயே கிடைத்தனஎன்பதை நன்குஉணர்ந்தார். லெய்றியாவிலே கிடைத்தவெற்றியின்பின் அங்கிருந்த இஸ்லாமியர் துரத்தப்படவே, அவர்களதுமாளிகையைத்தேவமாதாபேரால் ஒருஆலயமாக மாற்றினர். மேலும்இவ்வரசர் பொதுஇடங்களிலெல்லாம் தேவமாதாவின் திருச்சுரூபத்தைஸ்தாபித்து அவளுடைய மகிமையைப் பிரபல்யப்படுத்தினர். சான்ராஹெம்என்னும்நகரை வெற்றிகொண்டதன் ஞாபகார்த்தமாக (St. Mary of Alcobaca) அல்கோபாக்காவின் அர்ச். மரியாயின் ஆச்சிரமம்திகழ்ந்தது. இது அர்ச். கிளேர்வோவின் அர்ச். பேர்ணாட்என்பவரின் சந்நியாசிகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

இவ்வரசனைப்பின்தொடர்ந்து ஆட்சிப்பீடமேறிய போர்த்துக்கேயமன்னர்கள்யாவரும் தேவமாதாவின்பக்தியையும், புகழையும் பரப்புவதில் அயராத ஊக்கம் காட்டினர்.

எல்லாவற்றிற்கும் முடிசூட்டுவது போல் அமைந்தது 1-ம்ஜோண் அரசர் காலத்தில் காஸ்ரிலே என்னும்இடத்தை வெற்றிகொண்டதன் ஞாபகார்த்தமாகக் கட்டியெழுப்பப்பட்ட வெற்றிமாதாவின் மிகப்பிரமாண்டமான சந்நியாசஆச்சிரமமாகும். யுத்தஞாபகார்த்த மண்டபம்என்று வழங்கப்பெற்ற இக்கட்டடம் முழுஐரோப்பாவிலுமே மிகப்பிரமாண்டமானதென்று கருதப்படுகிறது.

காஸ்ரிலே என்னும் இடத்தில் கிடைத்தவெற்றி போர்த்துக்காலின் சுதந்திரத்திற்கும், விடுதலைக்கும்காரணமாயமைந்த மிகவும்முக்கியமான ஒருவெற்றியாகும். காஸ்ரிலேயுத்தத்திற்குப் படையைநடத்திச்சென்ற தளபதி நூனோ அல்வாறெஸ் ஓர்உத்தமபடைத்தலைவர். தேவமாதாபேரில் மிகவும் பக்திவைராக்கியம் உடையவர். அவருடையவாளிலே 'மரியாய்' என்னும்நாமம் பொறிக்கப்பட்டிருந்ததாம்.

தேவமாதாவின் மோட்சாரோபணத்திருநாளிலே ஆரம்பமாகிய இந்த யுத்தம் தேவமாதாவின்மட்டில் அரைகுறையான நம்பிக்கையுடனேயே ஆரம்பமாயிற்று, வீரருக்கிடையேயிருந்த அவநம்பிக்கையைக் கண்ட தளபதி அவர்களை மனஞ்சோரவிடாதுதேற்றித் தேவதாயே சகல நம்பிக்கையும்என்றும், அவளேஎமக்காகப் பரிந்துபேசுவாளென்றும் அவர் [illegible] தூண்டிவந்ததுமல்லாமல் தேவதாயாரைக்குறித்து உபவாசம்அனுட்டிக்கும்படியும் வீரருக்குப்புத்திகூறினார். ஆடம்பர கேளிக்கைவிநோதங்களை விலக்கும்படியும் சொல்லிவந்தார்.

இந்தயுத்தம் வெற்றிகரமாக முடிந்ததற்குத் தோத்திரமாக இந்தத்தளபதியும், அரசரும் மாதாபெயரால்அமைந்த யாத்திரைஸ்தலங்களுக்கு யாத்திரை செல்லலாயினர். இந்தயுத்தம் வெற்றியாகமுடிந்த இடத்திலேயே மேற்கூறிய பிரமாண்டமானமடத்தைக் கட்ட ஆரம்பித்தார் அரசர். இன்றுவரை அழியாதுவிளங்கும் இந்தஆச்சிரமம் உண்மையில் தேவதாயாருக்கு மிகவும்உவப்பானதொன்றாகும்.

வெற்றிமாதாவின் மகோன்னத ஆச்சிரமமானது கண்களைக்கவரும் அழகிய வேலைப்பாடமைந்தது. திறமைமிக்க ஓவியரின் கைத்திறன்கொண்டமைந்திருந்தது. ஓவியக்கலையின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்ற அதன் அழகும், கலைநுட்பமும் விபரிக்கில்சொல்லில்அடங்கா. ஆச்சிரமத்தின் வாயிலிலே மோட்சவீட்டின்காட்சி சித்திரிக்கப்பட்டிருக்கின்றது. மத்தியிலே பரிசுத்தபரம திரித்துவஓவியமும், அதற்குமேலாகத் தேவதாயார் திருக்குமாரனை ஏந்தியபடியும், கரங்களிலே செபமாலை தாங்கியபடியும் ஒருசுரூபமும் காணப்படுகின்றன. மேலும், கதவின் இருமருங்கிலும் பன்னிருஅப்போஸ்தலர்களும், அவர்களைச்சூழவரத் தேவகணங்களும், கதவுக்கு மேலாக நான்குசுவிசேஷகரும், அவர்கள்மத்தியில் கிறீஸ்துநாதரும் காணப்படும்காட்சி செதுக்கப்பட்டிருக்கின்றது.

ஆச்சிரமத்தின்வாயிலைக்கடந்து உட்சென்றால் வலப்புறமாக அழகியதேவாலயம் இருக்கின்றது. அவ்வாலயத்தின் மத்தியிலே 1-ம்ஜோண் அரசருடையவும், அவரது அருமைப் பத்தினியுடையவும் கல்லறைகள்இருக்கின்றன சுவர் இடைகளிலே வீரர்களின் வீரச்செயல்களைக்குறிக்கும் சித்திரங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளிடையே சிறந்த கப்பலோட்டியும், லிஸ்பன்நகருக்கணித்தாய்ப் "பெத்லகேமின் தேவதாய்" என்னும் தேவமாதாவின் ஆலயத்தைக் கட்டுவித்தவரும், சிறந்த பக்திமானென்று கருதப்பட்டவருமாகிய ஹென்றி நெயர்காலாஎன்பவரின் உருவச்சிலை இருக்கின்றது.

இவ்வாலயத்தின் சிற்பவேலைகளைச் செய்துவந்த ஒருசிற்பி கடும்தவம்இயற்றியதன்விளைவாக ஒருநாள் அங்கேயே இறந்துகிடந்தானென்றும், மிகுதிவேலையைச் செய்துமுடிக்க வேறெவரும் முன்வரவில்லைஎன்றும் கூறப்படுகிறது இந்தச்சிற்பியின் கைபடச் செதுக்கப்பட்ட சிலைகளும், உருவங்களும் வியத்தகுமுறையில் இருக்கின்றன. அவைகள் அற்புதபடைப்புகள் என்றே கூறவேண்டும். இன்றும் இக்கோவில் கூரையின்றி அழியாதநிலையில் இருக்கக்காணலாம்.

மனிதருடைய சுயபலத்தையும், திறமையையுங்கொண்டு இம்மாபெரும் திருப்பணியைச்செய்து முடிக்கஎண்ணி இருமுறைமுயன்றும் அம்முயற்சியெல்லாம் வீணாயிற்று. மனிதருடையகௌரவத்துக்காக அல்ல, தேவதாயாரின் மகிமைக்காக— புகழுக்காக நிர்மாணிக்கப்பட்ட இந்தஆச்சிரமம் அவளுடைய உதவியோடும், அவளின்மேல்வைக்கும் அசையாத நம்பிக்கையோடும், அயரா உழைப்போடுமே வெற்றிகரமாய்ப் பூர்த்தியானது. இதை நிருமாணிப்பதில் ஏற்பட்ட தடைகளை வெற்றிகொள்ளவும், கல்முடிவைக்காணவும் உதவியது தேவதாயாரின் பேருபகாரம்தான் எனலாம். இந்தமாபெரும் ஞாபகசின்னமானது ஆரம்பத்திலிருந்தே தேவமாதாவுக்கு அர்ப்பணிக்கப்பட்டு, அவளுடைய பாதுகாவலோடும், உதவியோடும் நிருமாணிக்கப்பட்டு, அவளின் மகிமைக்காகவே இருந்துவருகிறது.

மேற்கூறியஆச்சிரமம் கட்டிமுடிக்கப்பட்டதும் தொமினிக்குவின்சபைச் சந்நியாசிகளிடமே கையளிக்கப்பட்டது. இச்சபையாரே போர்த்துக்காலில் திருச்செபமாலைப் பக்தியைப் பரப்பியவர்கள். போர்த்துக்காலின் செபக்களஞ்சியம் என்றாற்போன்று திகழ்ந்தது இச்சந்நியாச ஆச்சிரமம். அன்னாரது அயராதஉழைப்பினாலே — பரித்தியாகத்தினாலே போர்த்துக்கால்மக்களின் இதயங்கள் தேவன்பக்கமாகத் திருப்பப்பட்டு விசுவாசமும், ஞானவெளிச்சமும் பரிணமித்ததெனலாம். மேலும், கடவுள் தமதுதிருத்தாயார் மூலம் உலகுக்கு 1917-ம்ஆண்டு பாத்திமாபதியிலே வெளிப்படுத்திய செய்திகள்யாவுக்கும் மக்களைப் பக்குவப்படுத்திய பணியைச்செய்தவர்கள் தொமினிக்குவின் சந்நியாசிகளே. இந்தச்சம்பவங்களைத் தூரதிருஷ்டியாகவோ, தீர்க்கபுத்தியுடன் உணர்ந்ததாலோ, என்னவோ போர்த்துக்காலின் அரசர்கள்பலர் மக்களுக்கு வழிவழியாய்த் தேவமாதாவின் பக்தியைப் பரப்பிவந்தனர். உலகம் மனிதஅறிவோடு பரீட்சித்தறியும் விஞ்ஞானத்தாலல்ல — எல்லாம்வல்ல இறைவனின் திருத்தாயாரது கடாட்சத்தாலேயே நிலைபெறுகின்றது. வாழ்க உலகநாயகி! வாழ்க வெற்றிமாதா!

காவலூர் யேசு.

---

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

(முன்தொடர்ச்சி)

அடுத்தநாளாய வெள்ளிவாரம் காலை 9மணி. ஆண்டவர்அவர்கள் குருமனையில் பங்குக்குரியசகலவிதஇடாப்புகள், பொருட்கள், ஆதனங்கள், சக்கிறிஸ்திப்பொருட்கள் எனுமிவைகளைப் பார்வையிட்டு மிக்கதிருப்தியும், மகிழ்ச்சியும் அடைந்தனர். பின்னர் சிறியோரின் பக்திச்சபைகளான மாசில்லாமாதா சபை, பூசைப்பரிசாரகர்சபை, நற்கருணைவீரர்சபை, பாலர்சபைஆகியன ஆண்டவர்அவர்களைத் தனித்தனிசந்தித்து மாலைகள்சூட்டி, பாக்கள்பாடி, அன்பளிப்புகள்அளித்துஉபசாரமொழிகள் கூறினின்றன. அவரும் ஒவ்வோர் சபையினர்க்கும்உரிய உயரியநன்மதிகள்கூறி, மாசில்லாமாதா சபையினரின் ஞாயிறுவார ஞானஉபதேசவகுப்புச் சேவையினைப்பாராட்டியும், பூசைப்பரிசாரக பயிற்சி பெறுபவர் தேவஅழைத்தலுக்குச் செவிசாய்க்கும்வழியில் நடக்கவேண்டுமெனக் கூறியும் அவர்கள் சபைச்சின்னங்களை ஆசீர்வதித்து அணிவித்து, அவர்களோடு பிரதிமைப்படம்பிடிக்கப்பெற்று மகிழ்ந்தனர்.

**ஆயித்திய மலையில்:** அன்று பிற்பகல் 5மணியளவில் ஆயித்தியமலைச் சந்தியில் அப்பகுதியினர், தாண்டவன்வெளிப்பங்கினர் கட்டளைக்குரவர் தலைமையில் வாத்தியவரிசையுடன் காத்துநின்று ஆண்டவர்அவர்கள் வந்திறங்கியதும் மலர்மாலைஅணிவித்து, ஆலயத்துக்கு அழைத்துச்சென்று அங்குஉயர் மேடையில் அமர்ந்ததும் திரு. எஸ். அலோசியஸ் (பி. டபிள்யு. டி. மேற்பார்வையாளர்) அவர்களால், சிதறிய ஆடுகளைத்தேடிக் காடுமலைதாண்டி வந்தமை, தங்கள்தேவைகள். நன்றியுரைகள் என்பன அடங்கிய சிறந்தோர் வாழ்த்துப்பத்திரம் படித்துஅளிக்கப்பட்டது. பின்னர் இப்பகுதிக் குடியேற்றத்திட்டத்தின் அதிகாரியும், சைவசமயத்தவருமான திரு. எஸ் ஏ. கிருஷ்ணபிள்ளை அவர்கள், சுவாமி வம்பேக் அவர்கள் இப்பகுதியில் கிணறு ஒன்றை அமைக்கமுன்வந்தபோது, அரசாங்கத்தினரெடுத்த அத்தனை முயற்சிகளும் இவ்விஷயத்தில் வீணுகியமையை வற்புறுத்திப் பலகூறியும், அவர்கள்மாதாவின்மேல் தளராதநம்பிக்கையுடன் தொடர்ந்துவேலையைக் கொண்டுநடத்தி, அந்தப்பரலோகதேவி இந்தப்பகுதியில் குடியிருக்கவிரும்பிய அற்புதத்தை இந்தநன்னீரூற்றுமூலம் காட்டச்செய்தார்; இப்பதியின்சென்ற ஆண்டு விழாவைபவம் எனக்கு இன்னும் 5வருடஎல்லையில் இரண்டாவது (இலங்கையின்) மடுத்திருப்பதியே ஆகிவிடுமென உணர்வூட்டியது எனக்கூறியும் பலநன்மொழிகள் கூறினர்.

ஆண்டவர்அவர்கள் பதிலளிக்கையில், நிரந்தரபூசை நடப்பதற்கேற்ற வசதிகளை வெகுவிரைவில் செய்வதாகத் தெரிவித்துத் தமக்கு அளிக்கப்பெற்ற வரவேற்புகளுக்காக நன்றிகூறியபின் திவ்வியபலிபூசை நிறைவேற்றினர். முடிவில் அபிஷேககணையாழியை அனைவர்க்கும் முத்திசெய்யுமாறுஅளித்து, நேர்கடன் கஞ்சியை ஆசீர்வதித்து அனைவர்க்கும் பங்கிடவிடுத்து, அரசாங்கத்தினரால் அளிக்கப்பெற்ற புதியகத்தோலிக்க அருட்பணி இல்லத்தில் ஆயித்தியமலையினரால் அளிக்கப்பெற்ற ஓர்சம்பிரமமான தோட்டவிருந்தில்கலந்து அனைவர்க்கும் ஆசீரளித்து, நன்றிகூறிக் கட்டளைக்குரவரிடமும், மற்றுமுள்ளோரிடமும் விடைபெற்று இப்பங்கில் தம் சுற்றுலாவினைமுடித்து மேற்றிராசனமாளிகைக்கு மகிழ்வொடுமீண்டனர்.

எம்திருமலைஆயர் சுகபலம்பெற்றுப் பல்லாண்டு வாழ்க!

— நிருபர்

---

## சோவியற்ருஷியாவினால் முடியுமா ?

அமெரிக்கா தனதுபலத்தைப்பற்றி வீண் மனக்கோட்டைகள் கட்டித் தன்னைத்தானே தேற்றிக் கொள்வதாக ருஷியபிரதமர் நிகிதா குருசேவ் அகில கம்யூனிஸ்த இயக்கத்தின் 21-வதுகாங்கிரஸ் மகாநாட்டின் முடிவுரையில் பேசும்போது குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது: ஐரோப்பாவில் பலநாடுகளைத் தனது நேசநாடுகளாக்கிக் கொண்டுள்ள ஐக்கிய அமெரிக்க தேசம் அங்கெல்லாம் கண்டபடிவிட்டுக் கண்டம்பாயும்எறியாயுதங்களின் தளங்களை நிறுவியிருக்கின்றது. யுத்தமூண்டால் இவற்றின்உதவியால்ருஷியாவை விரைவில் அடிமைப்படுத்திவிடலாமென அமெரிக்கா எண்ணுகின்றது. ஆயின், எங்களிடமுள்ள எறிஆயுதங்கள் அமெரிக்கதேசம்வரைக்கும் போகக் கூடியவை. ஆகவே, அமெரிக்கா எங்களுக்குஅளிக்க எண்ணியிருக்கும்சேதத்தைப்பார்க்கிலும் அதிகசேதத்தை எங்களால் அளிக்கமுடியும்.

### அமெரிக்க செயற்கைக்கிரகம்

பூமியைச் சூழவரவுள்ள காலநிலையைப்பற்றி மேலும் அதிகமான தகவல்களைப் பெறும்நோக்கமாக இருபத்தொன்றரை றாத்தல்நிறையுள்ள செயற்கைக்கிரகமொன்றை ஐக்கிய அமெரிக்க தேசம் சென்ற 17-ந்திகதியன்று வானவீதிக்கு அனுப்பியது. காலநிலையை அறிவிக்கும் இந்த "வான்காட்" கிரகம் சரிவர இயங்கிவருவதாக வாஷிங்டன் நகரிலிருந்து அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது பூமிக்குச் சமீபமாக வலம்வரும்போது மணித்தியாலம் 18,379 மைல் வேகத்திலே 125·9 நிமிஷங்களுக்குஒருமுறை உலகத்தைச் சுற்றுகின்றது. பூமிக்கும், அதற்குமிடையிலுள்ள அதிகம்குறைந்ததூரம் 329 4 மைலென்றும், அதிகம்கூடிய தூரம் 13,047 மைலென்றும் சொல்லப்படுகிறது.

---

● தொலைவிகிதத்தை அடிப்படையாகக்கொண்டு பார்க்குமிடத்துக் கிழக்குப்பிறெனிஸ் மலைகளிலுள்ள அன்டோரா என்ற சிறியஐரோப்பிய நாடுதான் பூரணக்கத்தோலிக்கநாடாகத் திகழ்கின்றது. அதன்முழுக்குடிசனங்களாகிய 5,850பேரும் கத்தோலிக்கரே.

### போலிஷ் மேற்றிராணிமாரும் ரோமாபுரித் தரிசனையும்

இவ்வருடத்திலே பரிசுத்தஸ்தானத்துக்குத் தங்கள்காலாந்தர தரிசனையைச் செய்யவேண்டுமெனச் சிபாரிசுபண்ணிப் போலாந்துதேச மேற்றிராணிமாருக்கெல்லாம் வத்திக்கான் இராச்சிய மந்திரியாரான கருதினல் தார்டினி ஆண்டவர் நேர்முகமாகத் திருமுகங்கள் அனுப்பிவைத்திருக்கின்றார். அவர்கள் இந்த ரோமாபுரித் தரிசனையைச் செய்யக்கூடியவர்களாயிருந்தால் இரண்டாவது உலகயுத்தம் ஆரம்பமானபின் அவர்களில் பெரும்பான்மையோரின் முதலாவது வெளிநாட்டுப் பிரயாணம் இதுவாயிருக்கும். கனன்சட்டப்படி அவர்கள் ஒவ்வோர் ஐந்து வருடங்களுக்கும் ரோமாபுரியைத் தரிசிக்க வேண்டியவர்கள். ஸ்ராலினுடைய ஆட்சிகாலத்திலே சிறையில் வைக்கப்பட்டிராத மேற்றிராணிமாருக்கும் ரோமாபுரி செல்வதற்குச் சுதந்திரம் கிடைக்கவில்லை.

---

### அங்கிளிக்கன் மேற்றிராணியார் பதில் அளிக்கின்றார்

திருச்சபைச் சாதாரண திருச்சங்கத்துக்கு அவதானிகளைப் பாப்பரசர் அழைப்பாரானால் இங்கிலாந்துச்சபை அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கில்போட்நகரின் அங்கிளிக்கன் சபை மேற்றிராணியாரான கனம். ஜவர் வாற்கின்ஸ் அவர்கள் கூறியிருக்கின்றார். சாதாரண ஒத்துழைப்புக்கான அங்கிளிக்கன்சபைச் சங்கத்தின் தலைவரான இவர் ஹைறசேர்ச்சின் பத்திரிகையான "சேர்ச்ரைம்"ஸிலே எழுதியிருப்பது வருமாறு: "வத்திக்கானிலிருந்தும், பிரிவினைச் சபைப் பொதுப் பத்திரியாக்குவிடமிருந்தும்வந்துள்ள ஐக்கிய அழைத்தலானது கிறீஸ்துவ உலகமுழுவதும் ஐக்கியஇயக்கத்துக்கும், விருப்பத்துக்குமான ஓர் அறிகுறியாகும்; இது வருகால நம்பிக்கையைத் தருவதொன்றாகக் கொள்ளப்படவேண்டும்" என்பதே.

---

### இரும்புத்திரையும் கத்தோலிக்கரும்

இரும்புத்திரைக்குப் பின்னால் அகப்பட்டுக் கம்யூனிஸ்த ஆட்சியின்கீழ் இருந்துவருகின்ற நாடுகளில் போலாந்தே மிகப்பெருந்தொகையான கத்தோலிக்கரைக் கொண்டிருக்கிறது. அதாவது, அதன் குடிசனத் தொகையில் நூற்றுக்குத் 96·1 விகிதமானோர் கத்தோலிக்கராவர். இரண்டாவதாகச் செக்கோசிலவக்கியாவே அதிபெருந்தொகையான கத்தோலிக்கரைக் கொண்டிருக்கிறது. இதன் குடிசனங்களில் 52·3 விகிதமானோர் கத்தோலிக்கர். மூன்றாவதாக மிகப்பெருந்தொகையான கத்தோலிக்கரைக் கொண்ட ஹங்கேரிய குடிசனங்களில் நூற்றுக்கு 60 9 விகிதமானோர் கத்தோலிக்கர். சோவியற்ருஷியா ஒருகோடி கத்தோலிக்கரைக்கொண்டுள்ளது. அதாவது, அதன் முழுக்குடிசனங்களிலும் கத்தோலிக்கர் நூற்றுக்கு 5 விகிதமானோரே.

### கம்யூனிஸ்தர்கள் கத்தோலிக்கராயினர்

பதின்மூன்று மேம்பட்ட கம்யூனிஸ்தர்கள் கட்சியில்கொண்ட அவேஷங் காரணமாகச் சமீபத்திலே அதனைவிட்டு வெளிகொண்டு கத்தோலிக்க திருச்சபையில்சேர்ந்திருக்கின்றார்கள். இந்தியாவிலே செம்பகனூரில் இது நிகழலாயிற்று. இவர்களின் தலைவரான திரு. ஸ்ரீனிவாசன் கம்யூனிஸ்தர்களுக்காகப் பத்து வருடகாலம் ஊக்கமாகப் பிரசாரஞ் செய்துவந்தவர். போல் என்ற நாமத்தைத் தனதுஞானஸ்நானப்பெயராகத் தெரிந்துகொண்டஇவர் அர்ச். சின்னப்பரின் நிருபங்களை வாசித்தமையானது கம்யூனிஸத்தின் தப்பறையைக்கண்டுதெளியுமாறு "தனது கண்களைத் திறந்துவிட்ட"தென அன்று தெரிவித்துள்ளார். கத்தோலிக்கதிருச்சபையில்மட்டுமே "சுதந்திரமும், மனச் சந்தோஷமும்" இருந்துவரக் கூடுமெனத் தான் கண்டுகொண்டமையாலேயே அவர் ஓர்கத்தோலிக்கராகத் தீர்மானித்தார்.

### உலகமக்களுக்காக ஒருசெபமாலை

பரிசுத்தபாப்பரசர் உலகமக்களுக்காகத் தினமும் ஒரு செபமாலை— அதாவது ஐந்து கண்டங்களில் ஒவ்வொன்றுக்குமாக ஒவ்வோர் காரணிக்கஞ்சொல்லி ஒப்புக்கொடுக்கின்றார். விசுவாசப் பரப்புதல் திருச்சங்க அங்கத்தவர்களுக்குச் சமீபத்தில்அளித்த பேட்டி ஒன்றில் அவர் இதனை வெளியிட்டிருக்கின்றார். இத்திருச்சங்கமே அகிலமுழுவதும் நடைபெற்று வருகின்ற மிஷனரிய தொண்டுகளுக்கெல்லாம் பொறுப்பாயுள்ளது. "பாப்பரசர் முழு உலகத்துக்குமாகச் செபிக்கவேண்டும்; இந்தக் காரணத்தை முன்னிட்டு நாம் சொல்லும் செபமாலையின் ஒவ்வோர் காரணிக்கத்தையும் ஐந்து கண்டங்களிலும் ஒவ்வொன்றுக்கு அர்ப்பணஞ் செய்திருக்கின்றோம்; முதலாவது காரணிக்கம் ஐரோப்பாவுக்கு, இரண்டாவது ஆசியாவுக்கு, மூன்றாவது அமெரிக்காவுக்கு, நான்காவது ஆபிரிக்காவுக்கு, ஐந்தாவது ஓஷியானியாவுக்கு" எனப் பாப்பரசர் கூறலாயினர்.

### தென்னமெரிக்காவிலே செபமாலைப்படையெடுப்பு

குடும்பசெபமாலைப் படையணியின் தளகர்த்தரான வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமியார் சமீபத்தில் ஜீப்புகள், லொறிகள், ஜெனறேற்றர்கள், மற்றும் தளபாடங்களுடன் தென்னமெரிக்க நாடுகளில் படையெடுக்கவிருக்கின்றார். தற்போது சுவாமியார் லொஸ் ஆஞ்சேல்ஸ்நகரில் நிற்கின்றார். இங்கேதான் அவர் இற்றைக்குப் 17 வருடங்களின் முன் தமது குடும்பசெபமாலைப் படையணியை ஆரம்பித்தார். இத்தனைவருடங்களிலும் உலகில் பாதிப்பக்கமே அவர்சுற்றியிருக்கின்றார். இந்தப் 17 வருடங்களும் தமது அப்பியாசகாலமென்றே அவர் வர்ணித்திருக்கின்றார். அதனால், தற்போதுதான் அவர் தமது பெரும்பணியைத் தொடக்குகின்றார். அவர்கொண்டுசெல்லும் தளபாடங்களில்பெரும்பகுதி 15 செபமாலைத் திரைப்படங்களே. இவற்றில் ஒவ்வொன்றும் செபமாலையின் ஒவ்வோர் இரகசியத்தை 30 நிமிஷம்வரை வர்ணித்துக்காட்டுவதாயிருக்கும். இத் திரைப்படங்கள் ஸ்பெயினிலே தயாரிக்கப் பட்டனவாகும். இவைகள் பிறசெல்ஸ்நகர உலக பொருட்காட்சியிலே காண்பிக்கப்பட்டபோது இரண்டரை லட்சம்மக்கள் அவற்றைப் பார்த்திருக்கிறார்கள்.

---

—(✠)—

## பாப்பரசர்அணிந்த திருக்குருசு

23-ம் அருளப்ப பாப்பரசர் 25 வருடங்களாக ஓர்அதிமேற்றிராணியாராய் இருந்தபோது தமது மார்பில் தரித்திருந்த குருசை ரோமாபுரியிலுள்ள அர்ச். அம்புரோஸியாரின் மகா தேவாலயத்தைச்சேர்ந்த ஆசீர்வாதப்பர்சபை மடாதிபர் பேர்னாஸ்கோனி அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றார். அவர் ஏன் அதைக் கொடுத்தார் என்பதுபற்றிய விபரம் வருமாறு:

1925-ம் ஆண்டு ஓர்அதிமேற்றிராணியாராகத் தாம் நியமனஞ் செய்யப்பெற்றபோது வருங்கால பாப்பரசரான அவர் தமதுமார்பில்தரிக்கப் புதியகுருசுஒன்றை வாங்குவதற்குப் போதியபணம் வைத்திருக்கவில்லை. அதனால், அவர் பாவனைசெய்த பழைய குருசுஒன்றை வாங்குவதற்காக மிலான் நகரிலிருந்த ஓர்வியாபாரியான தட்டானிடம் சென்றார். அப்போது இந்த வியாபாரி அர்ச். அம்புரோசியாரின் மகா தேவாலயத்தைச்சேர்ந்த கோமி என்னும் மடாதிபருக்குச் சொந்தமாயிருந்த ஒரேயொரு குருசை மாத்திரம் வைத்திருந்தான். ஆயினும், அதன்விலை இன்னுமே அதிகம்கூடியதாய் இருந்தது.

அநேக வருடங்களின் பின் ரொங்கல்லி அதிமேற்றிராணியார் (தற்போதைய பாப்பரசர்) மிலான்நகருக்கு விஜயஞ்செய்தபோது, அந்தத் தட்டாரவியாபாரியின் ஆபரணக்கடையிலே சிறிதுவேளை தரித்துநின்று பார்த்தபோது அந்தக்குருசு இன்னுமே விலைப்படாதிருக்கக் கண்டு உடனே தானே அதை விலைகொடுத்துவாங்கித் தமதுமார்பில் தரித்துக்கொண்டார். தாம் வெனிஸ்நகரின் பத்திறியாக்குவாகத் தெரியப்பெற்றபோது, அந்நகரின் விருது முத்திரையையும், அதன் கீர்த்திபெற்ற சிங்க அடையாளத்தையும் அந்தக்குருசில் சேர்த்துக்கொண்டார்.

இற்றைக்கு ஆறுமாதங்களின் முன் அம்புரோசியாரின் மகா தேவாலயத்தை அவர் தரிசித்தபோது அந்தக்குருசின் வரலாற்றை மடாதிபர் பேர்னாஸ்கோனி அவர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறினார். பின்னர் அங்கிருந்து வெளிகொள்ளும்போது அதன் மடாதிபர்களால் அணியப்படுமாறு அம்மகாதேவாலயத்துக்கே ஈற்றில் அந்தக் குருசைக் கொடுப்பதாக வாக்குறுதியளித்தார். தம்முடைய வாக்குறுதியைத் தற்போது அவர் நிறைவேற்றியிருக்கின்றார்.

—(✠)—

● தென்னிந்தியாவிலே கும்பகோண நகரசபைஅங்கத்தவராக அதிவண. எம். பி. சின்னப்பர்சுவாமியார் போட்டியின்றியே தெரிவுசெய்யப்பெற்றிருக்கின்றார். முந்தியதேர்தலிலே ஓர் கன்னியாஸ்திரியான சங். றப்பாயேல் தாயார் அந்தத்தொகுதிக்கு அபேட்சகராகநின்று வெற்றிபெற்றார். இம்முறைத்தேர்தலில் அபேட்சகராகநிற்க அவர்மறுத்துவிட்டதால் அந்தவட்டாரத்தைச்சேர்ந்த கத்தோலிக்கர் சுவாமியாரையே புதிய அங்கத்தவராகத் தெரியலாயினர்.

● நியூயோர்க்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஸ்பெல்மன் ஆண்டவர் சமீபகிழக்குக் கத்தோலிக்க சேமவாழ்வுச்சங்கம், பலஸ்தீன் நாட்டுக்கான பாப்பரசின் கஷ்டநிவாரண கம்மிஷன் ஆகியனமூலமாகப் பலஸ்தீன் நாட்டுஅகதிகளுக்குச் செய்துள்ள பேருதவியைப்பாராட்டி ஜோர்தான் அரசாங்கம் அல்-கோராப்என்ற நட்சத்திரமகிமைவரிசையை அவருக்குச் சன்மானித்திருக்கின்றது. ஜோர்தான் அரசாங்கம் அளிக்கக்கூடிய அதிகம் உயர்ந்த மகிமைவரிசை இதுவாகும்,

### லத்தறன் உடன்படிக்கை

பாப்பரசின்நாடுகளை இத்தாலியஅரசாங்கம் கைப்பற்றியதோடு 1870-ம் ஆண்டு திருச்சபைக்கும், இத்தாலிக்குமிடையே சுமார்அறுபது ஆண்டுகளாக நீடித்திருந்த பிணக்கை 1929-ம் ஆண்டிலே ஓர் முடிவுக்குக் கொணர்ந்த லத்தறன் உடன்படிக்கையின் 30-ம் ஆண்டு நிறைவுதினம் சென்றமாசிமாதம் 11-ந் திகதி வந்துபோயிற்று. சமீபத்திலே தம்பதவியிலிருந்து விலகிய இத்தாலியபிரதமர் சிஞ்ஞோர் பான்பானி அவர்கள் வத்திக்கான் இராச்சிய மந்திரியாருக்கு அனுப்பிய ஓர் தந்தியிலே "லத்தறன் உடன்படிக்கைக்குக் கைச்சாத்திடப்பெற்ற 30-ம் ஆண்டு நிறைவானது இத்தாலிய அரசாங்கத்துக்கும், பரிசுத்தஸ்தானத்துக்குமிடையிலுள்ள நல்லுறவுகளில் எய்தியுள்ள பயன்தரும் விளைவுகளைக் குறிப்பிடக்கூடிய ஓர் சந்தர்ப்பத்தை அளிக்கின்றது; இந்த உடன்படிக்கையால் ஏற்பட்டுள்ள சமய சமாதானம் தொடர்ந்து விருத்தியடைந்து வருமென்ற நம்பிக்கை பலமடைந்திருக்கிறது; இந்த உடன்படிக்கை இத்தாலியிலே புனிதமான ஓர் மனோற்சாகபோக்கையும், கத்தோலிக்க திருச்சபைக்குப் பலன்நிறைந்த அப்போஸ்தலத்துவத்தையும், இத்தாலிய சாகியத்துக்குப் பொது அபிவிருத்தியையும் நிரந்தரமாகஏற்படுத்துவதற்கு உதவியளிக்கும்" எனத் தெரிவித்திருந்தார்.

**சேபஅப்போஸ்தல சபை**
**பங்குனி 1959**

**பரிசுத்தபாப்பரசர் இம்மாதத்துக்கெனக் குறித்துள்ள கருத்துகள்**

பொதுக்கருத்து : பரிசுத்த பாப்பரசரின் பொதுக்கருத்துகளுக்காகவும், விசேஷ கருத்துகளுக்காகவும் வேண்டிக் கொள்வது.

வேதபோதக கருத்து : ஆபிரிக்காவில் திருச்சபைக்கு மிகவும்அவசரமான தேவைகளில்உதவ அநேகர் முன்வரும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்திய வேத
# பாதுகாவலன்
1959-ம் ஆண்டு
பங்குனிமாதம் 12-ந் திகதி

## நன்மரண தாதா

நன்மரணதாதாவென்று நாம் யாரைக் கொண்டாடுகின்றோம்? யேசுக்கிறீஸ்துநாதருடைய திரு அரவணைப்பிலும் அவர்தாயாருடைய திருக்கரங்களிலும் மரணமடையவரம்பெற்ற அர்ச். சூசையப்பரையே அன்றோ! அதனால் அவர்மரணம் மகாபாக்கியமான மரணமென்பதில் சந்தேகமில்லை. பிதாப்பிதாக்களும், தீர்க்கதரிசிகளும் தங்களதுகண்களால் காணவிரும்பித் தவங்கிடந்தும் கண்டுகொள்ளாமல்போன உலக இரட்சகரைத் தமதுகண்ணாரக் கண்டு, அவர்திருவாய்மொழியைக் காதாரக்கேட்டு, அவரை ஏந்திஅணைத்து, முத்தமிட்டு வளர்த்து, பாதுகாக்கும் மகோன்னதபாக்கியத்தை — முப்போதும் கன்னிகையான தேவதாயாரின் திருப்பத்தாவாயிருக்கும் மகோன்னதபாக்கியத்தை — திருக்குடும்பத்துக்குத் தலைவராயிருக்கும் மகோன்னதபாக்கியத்தை — இன்னும்எத்தனையோ மகோன்னத பாக்கியங்களையெல்லாம் அவர் பெற்றிருந்தபோதிலும் அவற்றிற்கெல்லாம் முடிசூட்டியதுபோல் இருந்தது அவருடைய மகாபாக்கியமானமரணமே. அவ்விதம் பாக்கியமானமரணம் அடைந்தமையாலே அவர் நன்மரணதாதாவென்று திருச்சபையிலே கொண்டாடப்பெற்று வருகின்றார். அம்மட்டோ! அவர் நன்மரணத்துக்கு மாதிரிகையாகவும், ஆதரவாகவும், அடைக்கலமாகவும் இருந்து வருகின்றார். அன்று ஒருபெண் மரணவஸ்தையாய்க் கிடந்தாள். அப்போது அவள் புருஷனும், பிள்ளைகளும் அவளின் மரணப்படுக்கையைச்சூழ்ந்து முழந்தாளிலிருந்து அழுதுகொண்டிருந்தார்கள். ஆனால்,அவளோ மனங்கலங்காது, மிகுந்தஅமரிக்கையாய் அவர்களுக்குவேண்டிய ஆறுதல்சொல்லிக்கொண்டிருந்தாள். அதைக்கவனித்தகுருவானவர் அவளைவிழித்து, இந்தஅந்தியவேளையிலே, சாகுந்தருவாயிலே இத்துணைபெரும் நம்பிக்கையை உனக்குகொடுப்பதுஎன்ன? என்றுகேட்டார். அப்போது அந்தப்பெண் அவரைப்பார்த்து, "எனக்கு நன்மரணவரம் தரவேண்டுமென்று கடந்தஇருபத்தைந்து வருடகாலமாகநன்மரணதாதாவான அர்ச். சூசையப்பரைப்பார்த்து அல்லும்பகலுமாக நான் இரந்துமன்றாடி வந்திருக்கிறேன்; இந்தவரத்தை அவர் எனக்கு இப்போது கொடுக்கப்போகிறார்; அதனால்நான் அமைதியாயிருக்கிறேன்" என்றுசொன்னாள். அதனால் பாக்கியமான மரணமடைய விரும்புகிறவர்கள் நல்மரணத்துக்குப்பாதுகாவலரான அர்ச் சூசையப்பரிடம் இந்தவரத்தைக் கேட்டுவருவது ஆச்சரியமாகாது. பரிசுத்தமானசீவியம், பாக்கியமானமரணம், பரலோகபாக்கியம்என்பனவே அர்ச். சூசையப்பரின் தாசர்கள்அடையும் சம்பாவனையாகும். சுவிசேஷத்திலே அர்ச். சூசையப்பர் நீதிமானென்று சொல்லப்படுகிறார். நீதிமானென்றால், சகலபுண்ணியங்களையும் சம்பூரணமாக அடைந்தவரென்று அர்ச். ஏரோனிமுஸ் அர்த்தம்சொல்லுகின்றார். யேசுக்கிறீஸ்துநாதரை அண்மியதாலே ஸ்நாபகஅருளப்பரும், அவருடையமார்பில் சில நிமிஷநேரம் சாய்ந்ததாலே சுவிசேஷகஅருளப்பரும், அவரது திருப்பாதங்களில் கண்ணீர்சிந்தியதாலே அர்ச் மரியமதலேனாளும் அர்ச்சியசிட்டர்களானார்கள். அங்ஙனமாயின் அவரைத் தமது கரங்களில் ஏந்தவும், அவருடன் முப்பதுவருடகாலம் அந்நியோன்னியமாய்சஞ்சரிக்கவும், அவரைப் போஷிக்கவும், வளர்க்கவும், அவரால் அப்பா, தந்தாய்என்று பட்சமாகஅழைக்கப்படவும் பாக்கியம்பெற்ற அர்ச். சூசையப்பர் எத்துணைபெரும் அர்ச்சியசிட்டதனத்தையும், எத்துணை அரும் வரங்களையும்அடைந்திருப்பாரென்று சொல்லவும்வேண்டுமா? அர்ச் சூசையப்பரை அத்தியந்தவிதமாகப் பக்திசெய்து வந்தவர்களும், நன்மரணவரத்தை அவரிடம்காதலாக இரந்து வந்தவர்களுமான அவரதுபக்தர்களில் எத்தனையோபேர் பங்குனி மாதம் 19-ந்திகதியிலும், அவருடையபக்திக்குரிய தினமாகிய புதன்கிழமையிலும் பாக்கியமான மரணம் அடைந்திருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். "நான் என் பிதாவாகிய அர்ச். சூசையப்பரிடம் கேட்டுக்கொண்ட சகாயமெல்லாம் குறைவில்லாது அவர் தந்தருளினார்"என்று அவரில் மிக்கானபக்திகொண்டிருந்த அர்ச். தெரேசம்மாள் கட்டுரைத்திருக்கின்றாள். ஆகவே,நாமும் அவரைஉத்தமமேரையாகப் பக்திசெய்துவோம். நமது அவசியங்களிலெல்லாம் அவர்சலுகையை இரந்துகொள்ளுவோம். சகலவரங்களிலும் மிக உந்நதமானநன்மரணவரத்தை அவரின் மூலம் அடைந்துகொள்ளப்பிரயாசப்படுவோம்.

மரணம்வரும் போதருகில்
வந்திருந் தருள்பாலிப்பாய்
வரந்திகள் நீதா— வானோர்
தொழும்
பரன்கரத் தாதா—சரணம்.

---

கூடோதார்ஸ்ன அறியப்படுகின்ற அர்ச். வியான்னி அருளப்பரின் திருப்பண்டம்ஒன்று — அதாவது அவரின் அழிவுறாத இருதயமானது, அவர் மரணமடைந்த நூறும்ஆண்டு நிறைவு விழா வருகிறவைகாசிமாதம் கொண்டாடப்படுவதற்கு ஓர்ஆரம்பவைபவமாய் விசுவாசிகளின் வணக்கத்திற்கென்று பிரான்ஸிய ஆசனக்கோவில்களுக்கெல்லாம் சுற்றுப்பிரயாணமாக எடுத்துச்செல்லப்படவிருக்கிறது.

# சுதேச வர்த்தமானம்

### அர்ச். சூசையப்பர்பந்தி

யாழ்ப்பாணம், சென்வின்செந்றடிபோல தருமசபை, அர்ச். சூசையப்பர் பந்தியின் 51-வது வருடாந்தபொதுக்கூட்டம் சென்ற8-ந்திகதிஞாயிற்றுக்கிழமை பிற்பகல்5மணிக்குச் சென் சாள்ஸ்பாடசாலை மண்டபத்திலே ஆசனக்கோவில் சட்டனைக்குருவர் வண. சி. ஜோண்மேரி சுவாமியவர்கள்தலைமையில் ஆரம்பமாகி நடந்தேறியது. குருமாரும், பட்டணப்பகுதியிலுள்ள நாலுபந்திகளின் அங்கத்தவர்களும், மற்றும்உபகாரிகளும் திரளாக அதற்குச் சமுகமளித்திருந்தார்கள். வண. தலைவர்சுவாமியவர்கள் தமது ஆரம்பவுரையிலே, இப்பந்தியின் அங்கத்தவர்களுக்குத் தாழ்ச்சியென்னும் புண்ணியம் ஆவசியகமென்பதை அறிவுறுத்தினர். இனிவருங்காலத்தில் அநேக இளம்வாலிபர்களைத் தனதுஅங்கத்தவர்களாகக்கொண்டு இப்பந்தி விளங்கவேண்டுமெனவுங்கூறினார். அதன்மேல் வருடாந்தஅறிக்கையும், வரவுசெலவுவிபரமும் படித்துக்காட்டப்பட்டதும் சம்பத்திரிசியார்கல்லூரிஆசிரியர் எம். அந்தோனிப்பிள்ளை, பி. ஏ. அவர்கள் எழுந்து, தனக்காக ஆஸ்திக்காரனுமிராமல், ஏழைகளுக்காக ஆஸ்திக்காரனுமிருப்பவனே திருச்சபையின் மெய்யான ஆஸ்திக்காரன்என்ற அர்ச். அம்புரோசியாரின் மணிமொழியைப் பீடிகையாகக்கொண்டு அரியதோர் சொற்பொழிவாற்றினர். பின்னர் ஆசிரியர் எம் விக்றர் அவர்கள் தருமத்தின் அவசியத்தைப் பல எடுத்துக்காட்டுகள்மூலம் விளக்கிக்காட்டிப் பேசினர். ஈற்றிலே பந்தியின்அக்கிராசனரது நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவாயிற்று.

### ஆசனக்கோவிலில் ஞானவொடுக்கம்

பரிசுத்தகொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலையும், சுண்டிக்குளி சஞ்சுவாம்கோவிலையும்சேர்ந்த ஆடவர்களின் தபசுகாலஞானவொடுக்கம் இம்மாதம் 15-ந்திகதியாகியவருகிறஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆரம்பமாகி அடுத்த 22-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை முடிவடையும். இருகோவில்களையும்சேர்ந்த பெண்மணிகளின் ஞானவொடுக்கப் போதகராகவந்து தமது அருமையான பிரசங்கங்களாலே எல்லோரதும் உள்ளங்களைச்சார்ந்து அவர்களின் ஞானவளர்ச்சியிலே ஓர்புத்துணர்ச்சியையும், புதியஊக்கத்தையும் உண்டுபண்ணிவிட்டிருப்பவரான வண. எஸ். எம். விசுவாசசுவாமியவர்களே இந்தஞானவொடுக்கத்திலும் போதகஞ்செய்யவிருக்கின்றார்.

### பதினாயிரம்ரூபா தீர்ந்தது

சனப்பிரதிநிதிகள்சபையில் அமர்வதற்கு உரிமையில்லாத நிலைமையிலே அச்சபையில்அமர்ந்து வாக்களித்ததற்கு அபராதமாக 10,000ரூபாவும், வழக்குச்செலவுத்தொகையும் கட்டும்படி திரு. கே. எம். பி. இராஜரத்தினவுக்குக் கொழும்புடிஸ்திறிக்கோட்டிலே தீர்ப்பளிக்கப் பட்டிருக்கிறது. 1956-ம்ஆண்டுநடைபெற்ற பொதுத் தேர்தலிலே திரு. இராஜரத்தினஎன்பார் வெலிமடைப்பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். ஆனால்,அவர் தேர்தல்அதிகாரியிடம் தேர்தல்செலவுக்கணக்கைச் சமர்ப்பிக்கத் தவறியதற்காக 1955-ம்ஆண்டு வதுளைடிஸ்திறிக்கோட்டில் தண்டிக்கப்பட்டமையால், அவர்தேர்தலில் தெரிவுசெய்யப்படத் தகுதியுடையவர்அல்ல; ஆதலால் அவரதுதெரிவு செல்லமாட்டாதென்று திரு. கே. கே. அல்விஸ்என்பவர் கொழும்புடிஸ்திறிக்கோட்டில்வழக்குத்தொடர்ந்திருந்தார். இவ்வழக்கு விசாரணைமுடிவில் முன்சொன்னவாறு தீர்ப்பாயிற்று.

### திருச்சிலுவைப்பாதைச் சுரூபங்கள்

தனது பெரியபலிபீடத்துக்கு மேலாகக் கல்லானஉள்ளமும் கரைந்துருகும்படியாகக் கண்ணுருகியான காட்சி அளித்துவருகின்ற அறையுண்ட பெரியதிருச்சுரூபத்தையும், அலங்காரசித்திரவேலைப்பாடமைந்து வெள்ளிப்பேழைபோல் அழகேமயமாய்த் திகழ்கின்ற திவ்வியநற்கருணைப்பேழையையும் நவமான இருஅணிகலன்களாகக் கொண்டுள்ள பரிசுத்தகொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலானது இன்று பதினான்கு திருச்சிலுவைப்பாதைப் படங்களுக்குப்பதில் உயிருள்ள ஒவ்வியங்களைப்போன்று எழிலுற்றுவிளங்கும் பதினான்கு திருச்சிலுவைப்பாதைச் சுரூபங்களையும் மற்றோர்ஞான அணிகலமாகக்கொண்டு திருச்சிலுவைப்பாதைப் பக்திமுயற்சி செய்கிறவர்களின் கண்ணையும்கருத்தையும் ஒருங்கேகவர்ந்து அப்பத்திமுயற்சிக்கு ஓர்புத்துயிர் அளித்துவருவதுகாண்பது சந்தோஷமே.

### யாழ்ப்பாண நூல்நிலையம்

யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையக் கட்டடநிதிக்கென்று வருகிற ஆனி மாதம் 12-ந்திகதிமுதல் 25-ந்திகதிவரை ஓர்களியாட்டவிழா நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தற்போது யாழ்ப்பாணமுற்றவெளியிலே அமைக்கப்பட்டுவரும் இந்தநூல்நிலையத்தின்முதலாவது கட்டடத்தைப் பூர்த்திசெய்ய இன்னும்ஒருலட்சம்ரூபாவுக்குமேல் தேவைப்படுகிறது.

### திறம்வண்டிச்சேவை

கொழும்புநகரிலே திறம்வண்டிச் சேவையை வருகிறஆடிமாதம் 1-ந்திகதியோடு முற்றாகநீக்கிவிடுமாறு நகரசபைக் கம்மிஷனருக்குத் தலதாபனமந்திரி உத்தரவிட்டிருக்கின்றார். திறம்வண்டிச்சேவையில் ஈடுபட்டிருந்தஊழியர்கள் ட்றொலிபஸ்சேவையில் அமர்த்தப்படுவார்கள்.

### அரசாங்க விடுமுறைநாட்கள்

சமயவிடுமுறைநாட்கள் குறைக்கப்பட்டதைத்தொடர்ந்து, ஐந்துபுதிய அரசாங்க விடுமுறைநாட்களும், வங்கி விடுமுறைநாட்களும் புகுத்தப்பட்டிருப்பதாக உள்நாட்டுமந்திரி காரியாலயம் அரசாங்கபகுதிகளுக்கெல்லாம் சென்றசனிக்கிழமை அறிவித்திருக்கின்றது. அவையாவன : (1) பெரியவெள்ளிக்கிழமை — பங்குனி 27. (2) றம்சான்பெருநாளின் அடுத்ததினம் — சித்திரை 10. (3) புத்தவிசாகப்பெருநாளுக்கு மேலதிகமாக ஒருதினம் — வைகாசி 22. (4) போசன் பவுர்ணைத் தினம் — ஆனி 20. (5) தீபாவலி — ஐப்பசி 31. தற்போது இருந்துவருகின்ற ஏழுஅரசாங்க விடுமுறைநாட்களும், வங்கிவிடுமுறைநாட்களும் வருமாறு : (1) தைப்பொங்கல்— தை 14. (2) சுதந்திர தினம் — மாசி 4. (3) சிங்கள-தமிழ் புதுவருடப்பிறப்பு — சித்திரை14 (4) மேதினம்—வைகாசி1 (5) விசாகப்பெருநாள்—வைகாசி 21. (6)மகமதுபிறந்ததினம் — புரட்டாசி. 26.. (7) கிறிஸ்மஸ்விழா—மார்கழி25.

### ஆஸ்பத்திரிச் சுவீப்நிதி

சுகாதார அபிவிருத்தியின்பொருட்டு அந்தந்தத்தொகுதியின்தேவைகளை அறிவிக்கும்படிகேட்டுச் சுகாதாரமந்திரி பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு ஒருசுற்றுக்கடிதம் அனுப்பியுள்ளார். ஆஸ்பத்திரியை விசாலிப்பது, சாக்கடைவசதி, மின்சாரவசதி ஆகியனபற்றிய இடாப்புஒன்றைத் தயாரித்து அனுப்புமாறு சுகாதாரமந்திரி அந்தச் சுற்றுக்கடிதத்தில் கேட்டிருக்கின்றார். இவற்றிற்கென ஒவ்வொரு தொகுதிக்கும் 40,000ரூபா ஆஸ்பத்திரிச் சுவீப்நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறது.

## ஆசனக்கோவில் கட்டளைக்குருவர்

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவில் கட்டளைக்குருவராய் இருந்துவருகிறவரான வண. சி. ஜோண்மேரி சுவாமியவர்கள் சுகம்நோக்கி விடுமுறையிலே தம்முசுவகாடாகிய பிரான்ஸ்தேசம் செல்லவிருக்கின்றார். அவர் இம்மாதம் 17-ந்திகதியாகிய வருகிற செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பிரயாணமாகிப் பின்னர் அங்கிருந்தும் அடுத்த 21-ந்திகதியன்று கப்பலேறித் தமதுசுவகாடு செல்லுவார். ஆசனக்கோவில் விசாரணைப்பங்கைச்சேர்ந்த கிறீஸ்தவர்கள் கடந்தசிலதினங்களாகத் தனித்தனியாகவும், கூட்டங்கூட்டமாகவும் குருமனைசென்று அவரைச்சந்தித்து, கௌரிபாராட்டி அவருக்குப் பிரியாவிடைகூறிப் பயணோபசாரம்செய்த வண்ணம் இருக்கிறார்கள். சுவாமியவர்கள் சிந்தாத்திரைமாதாக்கு சென்று சுகம்பெற்றுச் சேமமேசம்மத்தியில் திரும்பவும்வந்துசேர இறைவன் திருவருள் பாலிப்பாராக.

## கல்விபயிலாத காரணம்

இலங்கையிலே 5வயதிற்கும், 14வயதுக்குமிடைப்பட்ட சுமார்ஐந்துலட்சம் பிள்ளைகள் இன்று பாடசாலைக்குச் சென்று படியாதிருக்கின்றார்கள். இதற்குக்காரணம், பாடசாலைகளிலுள்ள இடநெருக்கடியல்ல, ஆனால், கொடியவறுமையேயென்று கலவிமந்திரியமித்தகம்மிற்றி நன்குஆராய்ந்து அறிவித்திருக்கின்றது. பாடசாலைக்குச் செல்லவேண்டிய வயதுள்ளபிள்ளைகளுக்கு உடைகள், புத்தகங்கள்உட்பட அத்தியாவசியசாமான்களை வாங்கிக்கொடுக்க அரசாங்கம் பெற்றோருக்கு அலவன்ஸ்போன்ற ஒருதொகைப்பணம் கொடுக்கவேண்டுமென்றும் கம்மிற்றி அறிவித்திருக்கிறது.

## பன்னிருகிமிஷங்களில் ஒருகூடை

விவசாய, சுகாதார தினத்தைமுன்னிட்டு மாதகல் கிராமாபிவிருத்திச் சங்கங்களின் ஆதரவிலே நடைபெற்ற ஓர்கண்காட்சியில் வெங்காயக்கூடைகள்பின்னும் போட்டி ஒன்று நடந்தது. இதிலே முதல்பரிசைப்பெற்ற பெண்பிள்ளை பன்னிருநிமிஷங்களில் ஓர் கூடையைப் பின்னிமுடித்தாள். வெங்காயக்கூடைகளுக்கு அதிகதேவை ஏற்பட்டிருக்கும் இந்தக்காலத்திலே வெங்காயக்கூடைகள் பின்னுவதை விவசாயிகள் ஒருஉதவிக்கைத்தொழிலாகக் கைக்கொள்வார்களானால் ஒருகுடும்பத்துக்கு மாதம்40ரூபாவரை சம்பாத்தியம்கிடைக்குமென்று இந்தப்போட்டியை ஒழுங்குசெய்த காரியாதிகாரி திரு. எம். நடராஜா அவர்கள் கூறலாயினர்.

---

● சோவியற்ருஷியா வருகிற ஆனிமாதம்வரையிலே இருருஷியர்களைக் கொண்ட செயற்கைச்சந்திரன்ஒன்றை அயனவீதிக்கு அனுப்பக்கூடுமென அமெரிக்க மேரிலாந்துச்சர்வகலாசாலைப் பௌதிகசாஸ்திர போராசிரியரும், வானவெளிஆராய்ச்சி நிபுணருமான டக்றர்பிறெட் சிங்கர் சென்ற7-ந்திகதி கூறியிருக்கின்றார்,

● வருகிற ஆனிமாசம்வரையிலே ருஷியசெயற்கைச் சந்திரனிலிருந்து கொண்டு அயனவீதியில்சுற்றும் ருஷியர்களால் பூமியிலிருந்து சமிக்ஞைகளை அறியமுடியுமென்றும், செய்திகளைப்பூமிக்கு அனுப்பமுடியுமென்றும், கேள்விகளுக்குப் பதிலளிக்கமுடியுமென்றும் சொல்லப்படுகிறது. அயனவீதிகளுக்குச்செல்லும் இந்தருஷியர்கள் ஆங்கிலம்பேசுவார்களாம்.

● போர்த்துக்காலில் 18வருடங்கள் செலவிட்டவரும், பாத்திமாகாட்சிபெற்றமூன்று பிள்ளைகளிலும் தற்போது உயிர்வாழ்ந்திருக்கும் சின்றர் லூஸியாவை கண்டறிந்தவரும், அவருடனும், காட்சிகளின்போது சமூகமா

## இலங்கைவானொலி தேசியஒலிபரப்பில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள்
### பங்குனி 1959

**பங்குனி 21, 22, 23—**
காலை 6—55தொடக்கம், 7மணிவரையும் நற்சிந்தனை — பேசுபவர் திரு. அ. யேசுதாசன்

**பங்குனி 22-ந் திகதி—**
குருத்தோலை ஞாயிறு — காலை 10மணிதொடக்கம், 10—30மணிவரையும். தயாரித்து நடத்துபவர் திரு. அ. யேசுதாசன்.
கத்தோலிக்க கலைக் குழுவினர் பங்குபற்றுவர்.
குருத்தோலைஞாயிறு சம்பந்தமான விசேஷநிகழ்ச்சி நடைபெறும்.

**பங்குனி 27-ம் திகதி—**
பெரியவெள்ளி—காலை8-30மணி தொடக்கம், 9-30 மணிவரையும். நடத்துபவர் வண. சற். என். குரூஸ், ஓ. எம். ஐ. சுவாமியவர்கள்.
யேசுநாதரின் திருப்பாடுகளைப் பற்றி விசேஷ நிகழ்ச்சி நடைபெறும்.

---

## நேர்த்தியின் பூர்த்தி

சத்திரசிகிச்சை செய்யவேண்டியிருந்த, எனக்குண்டானவியாதிக்குச் சத்திரசிகிச்சையின்றியே அர்ச் அந்தோனியாரிடம் யான்தினமும் இரந்து வேண்டிக்கொண்டதின் பேரில், அற்புதவிதமாய் குணமடையலாயிற்று. இன்னும் யான்கேட்கும் மன்றாட்டுகள் யாவும் கிடைத்தருள வேண்டுமென்றும் பிரார்த்திக்கிறேன். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

ஓர்பக்தன்.

* * *

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

திருஇருதயநாதரின் அனுக்கிரகத்தினாலும், பரி. சதாசகாயமாதாவினதும், அர்ச். சூசையப்பரினதும் மன்றாட்டினாலும் எனக்குப்பணஉதவியும், என்வேலைமுடியவேதஉதவியும் கிடைத்தன. இவர்களின் நாமம் புகழப்படுவதாக.

* * *

சங். அல்போன்சா கன்னியாஸ்திரியிடம் யான் இரந்துகேட்ட கருமங்கள் யாவும் அனுகூலமாயின. நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். அவரின்புகழ் எங்கும், என்றும் நிலவுவதாக.

ஓர்பக்தன்.

---

யிருந்த அநேகருடனும் காட்சிகளைப் பற்றிக் கலந்துரையாடியிருப்பவருமான வண. ஜி. காடினர்சுவாமியார் அவர்களுடன்நடத்திய சம்பாஷணைகள்பற்றிச் சமீபத்திலே ஓர்புத்தகம் எழுதஆயத்தப்படுகின்றார்.

## சீனாவின்பக்கம் ருஷியாதிரும்புமா?

கேம்பிறிட்ஜ்நகரிலே முன்னைநாள் இராணுவவீரர்களின் கூட்டம்ஒன்றிலே சென்ற 15-ந்திகதியன்று பிரபல எயர்மாஷல் சேர் விக்றர் கொடாட் அவர்கள் பேசியபோது: "இந்தஉலகம் அழிக்கப்படுவதற்கல்ல, ஆனால், மனிதனின் உபயோகத்திற் கானதாகும்; இன்றுபுதியசகாப்தம் உருவாகத் தடையாயிருப்பன ஆயுதங்கள் அல்ல; ஆனால், ஆயுதங்களைப்பற்றிய அச்சமேயாகும்; நம்மிடம் ஆயுதபலம்பற்றிய அச்சபயம் இல்லையென்பதை ருஷியாஉணர்ந்துவிட்டால் நம்மோடுபோட்டியிடுவதை அதுநிறுத்திவிட்டுச் சீனாவின்பக்கம் தனதுகவனத்தைத் திருப்பும்; ஏனெனில், இராணுவ—பொருளாதார துறைகளிலே சீனாவை எவ்விதம்மிஞ்சுவது என்பதுதான் இன்றுருஷியா சிந்திக்கவேண்டியவிஷயமாய் இருந்துவருகிறது" எனக் கூறியிருக்கின்றார்.

## தேகவியோகம்

ஏழாலை, குராவத்தையை ஜென்மபதியாகக் கொண்டவரும், அர்ச். இசிதோர் கோவிலைச் சேர்ந்தவரும், கத்தோலிக்க பாடசாலைகளில் கடந்தபதினெட்டு ஆண்டுகளாகச் சிறப்பாகத்தொண்டாற்றி வந்தவருமான ஆசிரியர் திரு. எஸ். எஸ். மரியதாஸ்அவர்கள் சென்ற 25-2-59 புதன்கிழமை பிற்பகல் 8மணியளவில் காலஞ்செல்லலாயினர். மரிக்கும்போது இவருக்கு வயது 41. இவருக்கு மூன்று பெண்பிள்ளைகள் உளர்.

இவரின்பிரேதம் மறுநாள் பிற்பகல் 3 மணியளவில் கட்டளைக்குருவர் வண. ஜே. ஸ்பம்பதிசுவாமியவர்கள் துக்கசங்கீதம் பாடிச்செல்ல, ஊர்வலமாக அர்ச். இசிதோர்கோவிலுக்குக் கொண்டுசெல்லப்பட்டு அந்திமதிருச்சடங்குகள் முடிந்தபின் சேமக்காலையை அடைந்து அங்கு அடக்கம் செய்யப்படலாயிற்று. இவரையிழந்து துன்புறும் மனைவி, மக்கள், இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

**R. I. P.**

---

## கிழக்குஜேர்மனியின் திண்டாட்டநிலை

ருஷியபிரதமர் குருஷேவ் "மேற்குபேர்லின்" நகர பிரச்சினையைத் திடீரென முன்னணிக்குக்கொணர்ந்து பிரித்தானி, அமெரிக்கா, பிரான்ஸ்முதலாம் மேற்குநாடுகளைத் தற்போது கலக்கிக்கொண்டிருக்கும் முக்கியகாரணங்களிலொன்று, கம்யூனிஸ்தஆதிக்கத்தில் சோவியற்அரசின் கைப்பொம்மைபோல் இருந்துவரும் கிழக்குஜேர்மனியிலிருந்து பல்வேறு கலைஞர்களும், தொழில்நுட்பநிபுணர்களும் பெருந்தொகையாகத் தப்பியோடிச் சுதந்திர மேற்குஜேர்மனியில் போய்ச் சரணடைந்துகொண்டிருப்பதே. சென்ற 1957-ம்ஆண்டின் இறுதிவரையிலே அங்கிருந்து தப்பியோடிய கிழக்குஜேர்மனியர்களிடமாக வழமைபோல் மறுபோக்கை அமர்த்தி அங்குதொழில்துறைகளை நடத்தக்கூடியதாயிருந்தது.

ஆனால், சென்ற 1958-ம்ஆண்டிலே அங்கிருந்து சுதந்திரமேற்குஜேர்மனிக்கு மேற்குபேர்லின்நகர்வழியாகத் தப்பியோடியவர்களின்தொகை அத்தனைபெரிதாகக் கிழக்குஜேர்மனியில் பயங்கரநிலைமையை உண்டுபண்ணிவிடலாயிற்று. எஞ்சினியர்களும், தொழில்களில் திறமைவாய்ந்த நிபுணர்களும், நிர்வாகஸ்தர்களும் இல்லாக்குறைவால் கிழக்குஜேர்மனியில் அநேக தொழிற்சாலைகள் உள்ளபடியே மூடப்படவேண்டிய சங்கடநிலைமை ஏற்படலாயிற்று. றெயில்வே, தபால், தந்திச் சேவைகள் வெகுவாகப்பாதிக்கப்படலாயின. டக்றர்மார் அத்தனைவெகுவாகக் குறைந்துபோயினமையாலே உயர்ந்தசம்பளங்கள்கொடுத்துக்கிழக்குஜேர்மனிலைய டக்றர்மார் நாடும்படி செய்வதற்காக மேற்குஐரோப்பியநாடுகளிலும், ஆஸ்திரியாவிலும் ஓர்இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம்நாடிவரும் டக்றர்மாரின் சம்பளத்தில் ஒருபகுதி அவர்களுடைய சொந்தநாடுகளிலேயே கொடுபடுமென்றும் இணக்கஞ்செய்யப்படுகிறது.

தற்போதைய நிலைமை இன்னும் எட்டுஅல்லது பத்துமாதங்களுக்கு நீடித்திருக்குமானால் எல்லாம் விழலாகமுடியுமென்று கிழக்குஜேர்மன் அதிகாரிகள் அஞ்சுகின்றார்கள். நிற்க, கம்யூனிஸ்தஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனியின் சனத்தொகை 1கோடியே60லட்சம்பேர்மாத்திரமே. ஆனால், மேற்குஜேர்மனியின்சனத்தொகை 5கோடியே10லட்சம்பேர். இதிலிருந்து கிழக்குஜேர்மனியின் தாழ்வானநிலைமை வெளிப்பட்டு, மேற்குஜேர்மனியே உண்மையான ஜேர்மனி; இதிலிருந்து தற்காலிகமாகப் பிரிந்த ஒருபகுதியே கிழக்குஜேர்மனி என்ற மனப்பதிவை உண்டுபண்ணிவருகின்றது.

## அர்ச். சூசையப்பர் பந்தியின் ........

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| அநாதபிள்ளைகளின் புத்தகத்துக்கு ... | 15-85 |
| பொதுச்செலவு (முத்திரை, கடதாசி முதலியன) ... | 31-84 |
| வெள்ளக்கஷ்ட நிவாரணத்துக்கு ... | 100-00 |
| உபதேசியார்சம்பளம் ... | 540-00 |
| சிறைச்சாலை, வயோதிபர்சாலை, பத்திக்கூட்டங்கள் | 65-00 |
| | 4,195-02 |
| 1-1-59இல் கையிருப்பு ... | 250-41 |
| | 4,445-43 |

**கவனிப்பு:**

இத்தருமசபைக்குச் செய்யும் உதவிகளைப் பின்வரும் விலாசத்துக்கு அனுப்புக.

**THE DIRECTOR,**
**S. V. P., St. Joseph's Conference**
**Bishop's House, Jaffna.**

தலைவர்,
சென்வின்சென்ற் டி போல் தருமசபை,
அர்ச். சூசையப்பர் பந்தி,
மேற்றிராணியார் மாளிகை,
யாழ்ப்பாணம்.

---

## எஸ். ரி. லூயிஸ்அவர்களின்
## 2-ம்வருட மரணஞாபகம்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15—6—1906 | 18—3—1957 |

"என்னைச் சீவியத்தில் நேசித்தவர்களே, என்னை மரணத்திலும் மறவாதீர்கள்"

எனது நேசபத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய திரு. எஸ். ரி. லூயிஸ்அவர்கள் இவ்வுலகைநீத்த இரண்டாவதுஆண்டு நிறைவுதினம் 18-3-59 புதன்கிழமை முடிவடைவதை அறியத்தருவதோடு, இதைக்கண்ணுறும் வண. குருப்பிரசாதிகள், சங். சந்நியாசிகள், சங். கன்னியாஸ்திரிகள், மற்றும் உறவினர், சிநேகிதர்களும் இவரின் ஆத்மசாந்திக்காக வேண்டிக் கொள்ளுமாறு தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அன்று யாழ்ப்பாணம், ஆசனக்கோவிலிலும், மட்டக்களப்பு (தாண்டவன்வெளி) பரிசுத்த வியாகுலமாதாகோவிலிலும் திவ்வியபலிபூசைகள் நிறைவேறும்.

நேசபத்தாவையிழந்து துயருறும்
மனைவி: மேரி லூயிஸ்
அருமைத் தந்தையையிழந்து துயருறும்
திருமதி: யோசெவ் ஞானசௌந்தரி,
செல்வன்: அன்ரனி தியாகராசா,
செல்வி: மேரி அழகுசௌந்தரி,
மருகர்: திரு. எம். யோசெவ்.
பேரப்பிள்ளைகள்
செல்வி: மேர்சி சகாயம்,
ரூஸ் யோசேப்பின்,
வளர்ப்புக் குழந்தை
செல்வன்: கிறிஸ்ரோபர்.

---

## நேர்த்தியின் பூர்த்தி

திருஇருதய இராசாவின் இரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். செபஸ்தியார், அர்ச். பத்தாம்பத்திநாதர், அர்ச். யூதாததேயு இவர்களின் மன்றாட்டாலும் நான்கேட்டகாரியம் அனுகூலமானது. அதிமேலும் சித்தியாகவும், எனதுபுருஷன் குடியைவிடவும் உதவிபுரியுமாறு இவர்களை இரந்துமன்றாடுகிறேன். இவர்களின் நாமம் என்றும் புகழப்படுவதாக.

தேவதாயின் அடிமை.

கொழும்பு

# றோமைக்குத் திரும்ப வரும்போது......

கீர்த்திவாய்ந்த ஸ்தானபத்திய நிபுணரும், நாடக நூலாசிரியையும், முன்னர் இத்தாலிய அரசாங்கத்தினிடமாக அமெரிக்க ஸ்தானிகராய் விளங்கியிருந்தவருமான ஸ்ரீமதி கிளேயர் பூத் லூஸ் அம்மையார் 23-ம் அருளப்ப பாப்பரசரின் திருமுடிசூட்டு வைபவத்தின்போது அமெரிக்க அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதியாகச் சமுகமளித்திருந்தார். சமீபத்திலே இவர் தன்னைக்கண்டு அத்திருவைபவம் சம்பந்தமாய்வினவிய வண. ஜோண் பி. டோறன் சுவாமியாருக்குத் தான் அவதானித்தவைகளைப் பற்றிப் பின்வருமாறு அறிவித்திருக்கின்றார்.

"வத்திக்கானிலே இராசிய பிரதிநிதி ஒருவரை அமெரிக்க மக்கள் கொண்டிராதபோதிலும் 12-ம் பத்திநாதபாப்பானவரின் திருமேனிஅடக்கத்திற்கும், 23-ம் அருளப்ப பாப்பரசரின் மகுடதாரண திருவைபவத்திற்கும் நமது சரித்திரத்திலேயே முதன்முதலாக அமெரிக்க ஜனாதிபதி பூரணமான தூதுக்கோஷ்டி ஒன்றை அனுப்பிவைத்தமையையிட்டு வத்திக்கான் பெருமகிழ்ச்சியுற்றதாய்க்காணப்படலாயிற்று. அமெரிக்க இராச்சிய மந்திரியான திரு. பொஸ்றர் டல்லஸ் அவர்கள் தாமே நேர்முகமாகச் சமுகமளிக்கத் தீர்மானித்தார். இத்தாலிய அரசாங்கத்தினிடமாக இதுவரை அமெரிக்க ஸ்தானிகராய் இருந்தமையாலும், நான் ஓர்கத்தோலிக்கமாதாகையாலும் அதேதகைமையில் நான் றோமாபுரி செல்லலானேன்.

"வத்திக்கானுடன் நாம் ஒழுங்குமுறையான இராசியப் பிரதிநிதித்துவம் கொண்டிராக்குறையை வத்திக்கானிலுள்ளவர்கள் முன்னிலும்பார்க்க இப்போது அதிகம்பூரணமாய் விளங்கிக்கொள்வதாக நான் உணருகிறேன். அங்ஙனம் இராசிய பிரதிநிதித்துவம் ஏற்படுத்திக்கொள்ள அமெரிக்க உள்நாட்டுத் தொல்லைகள் தடையாயிருப்பதை அவர்கள் நன்கறிவார்கள். சுயநலத்தால் தூண்டப்பெற்றுள்ள நமது தலைவர்கள்தானும் இந்தப் பிரதிநிதித்துவம் அமெரிக்காவுக்கே எவ்வளவோ உதவியாகுமென்பதை அறிந்திருக்கிறார்கள்.

"நிற்க, 12-ம் பத்திநாதபாப்பானவர் மட்டிலே எனக்குஉண்டாயிருந்த உந்நத மனப்பதிவோ எடுத்துக்கூறுந்தரமன்று. "அரசியல் உறவுகள் என்றால் என்ன என்பதைச் சரிவர நீங்கள் விளங்கினால் — மற்றவர்களால் விளங்கிக்கொள்ளப்படுமாறு அரசாங்கங்களும், பொதுமக்களும் செய்த பிரயத்தனங்களை நீங்கள்விளங்கியிருந்தால் "அரசியல் உறவுகளின் மகாத்துமா" என்றுதான் 12-ம் பத்திநாத பாப்பானவரை நீங்கள் பாராட்டிக் குறிப்பிட வேண்டும். நான் அறிந்தமட்டிலே கத்தோலிக்கமல்லாத உலகம் கத்தோலிக்க திருச்சபையை விளங்கிக்கொள்வதற்கும், அதனைக் கண்டடைவதற்குமாகப் 12-ம் பத்திநாதபாப்பானவரைக் காட்டிலும் அதிகமாக உழைத்தவர் வேறெவருமில்லை. அவரின் பேட்டிஒன்றைப் பெற்றதாலே தங்களிடம் உண்டான மாபெரும் மனப்பதிவைப்பற்றி எனக்குத் தெரிவித்துப் புரொட்டஸ்தாந்தர்களிடமும், யூதர்களிடமுமிருந்து றோமாபுரியிலே நான் பெற்றுக்கொண்ட பன்னூற்றுக் கணக்கான கடிதங்களைப் பார்த்ததே நான் திடுக்கிட்டுப்போனேன்.

"அப்போது இன்னுமே கத்தோலிக்க சமயத்தைச் சேராதவளாயிருந்த நானும், அமெரிக்க பாராளுமன்ற வெளிநாட்டு விவகாரக் கம்மிற்றியைச்சேர்ந்த மற்றும் அங்கத்தவர்களும் 12-ம் பத்திநாதரின் பேட்டியொன்றைப் பெற்றுக்கொண்டோம். அவரை நான் சந்தித்தது இதுவே முதன்முறையாகும். அப்போது அவர் என்னிடம்கேட்ட கேள்வி ஒன்றால் என்னைத் திடுக்காட்டமுறச் செய்துவிட்டார். அதாவது "நம்மிடம் சொல்வதற்கு உங்களிடம் யாதும் இல்லையா?" என்று கேட்டார்.

திடீரென இந்தக்கேள்வி வந்ததும் என்னபதில் சொல்வதென்றறியாது திகைத்துப்போய் நின்றேன். அப்போது பாப்பரசர் "அமெரிக்க பெண்மணிகள் யுத்தத்தைப்பற்றி எவ்விதஉணர்ச்சி கொண்டிருக்கிறார்கள்?" என்று கேட்டார். இது விஷயமாய் நான் அவருடன் பேசலானேன். சல்லாபம் முடிந்தது. எல்லோரும் வெளிகொண்டனர். எமது சம்பாஷணை முடிவிலே எங்களுடன் கூடிக்கொண்டு பேட்டிக்கு வந்த மொன்சிஞ்ஞோர் ஆண்டவரைப் பாப்பரசர்விழித்து, "இந்த மாது அமெரிக்காசென்று றோமைக்குத் திரும்பவரும்போது அவள் ஓர் கத்தோலிக்க மாதுவாய் இருப்பாள்" என்று கூறியதாகப் பிந்த நான் அறியலானேன். அதேபிரகாரம் நான் ஓர் கத்தோலிக்க மாதுவாகவே றோமைக்குத் திரும்பிச்சென்றேன்.

"சம்பாஷணையின்போது ஓர் சந்தர்ப்பத்திலே நான் பரிசுத்த பிதாவைநோக்கி, "நீங்கள் அல்லும்பகலும் ஓய்வு உறக்கமின்றியே வேலை செய்கிறீர்களே" என்று கூறியபோது, "நான் இளைப்பாற ஒரு நித்தியகாலம் உண்டு" என்றுமட்டும் அவர் கூறினார். அவர் பொதுவுடைமையை எதிர்த்துத் தமது நீடிய கடும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திவந்தார்.

"தற்போதைய 23-ம் அருளப்ப பாப்பரசர் ஓர் இத்தாலியர் அல்லாதவராய் இருந்திருந்தால் இத்தாலியதேசத்தில் பொதுவுடைமைக் கட்சியினரின்கை வலுத்திருக்கக்கூடும்எனப் பலர் அபிப்பிராயப்படுகின்றனர். இன்றையநிலையில் பாப்பரசராக இவரிலும் தகுதிவாய்ந்த ஒருவரைக் கருதினல்மார்திருச்சங்கம் தெரிவு செய்திருக்க முடியாது. புதிய பாப்பரசரை நன்கு அறிந்தவர்கள் கூறும் அபிப்பிராயப்படி இவர் பொறுமை, தாழ்மை, உற்சாகம், ஆய்வு, மதிநுட்பம், அரசியல்ஞானம் ஆதியாம் நற்பண்பாடுகள் வாய்ந்தவர்.

"வயதுசென்றவரான புதிய பாப்பரசர் (23-ம் அருளப்பர்) தெரிவுசெய்யப்பட்டபோது இவர் தற்காலிகபாப்பரசர்எனப் பலரும் அபிப்பிராயப்பட்டனர். அதாவது, வயதாளியாக விருப்பதால் கூடியசீக்கிரம் வேறொருவரைத் தெரியவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படக்கூடுமென அவர்கள் எண்ணினர். ஆனால், இவர் தமது சீவியகாலத்தில் இன்னும் ஒருநாளாவது எந்தஒரு நோயினாலும் பீடிக்கப்பட்டவர் அல்ல. இவருடைய சகோதரர், சகோதரிகள் நீண்டகாலஞ் சீவித்து வருகிறார்கள். ஆதலால், இவர் மக்கள் எதிர்பார்த்ததற்கு மாறாகப் பலவருடகாலம் ஆட்சிபுரியக் கூடும்.

"ஏழைகளானகமக்காரர்குடும்பத்தில் பிறந்தஒருவர் பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டதால் இத்தாலிய பொதுவுடைமைக் கட்சியினரின் ஜம்பங்கள் வலிகுன்றலாயின. பாப்பரசரின் இனபந்துக்கள் பெரும்பாலும் இன்னும் உழவர்களாகவே சீவனஞ்செய்து வருகிறார்கள். இவரின் மகிமையினால் அவர்கள் பெருமைப்படவில்லை. ஆனால், அத்தனை நேர்மையும், பரிசுத்ததனமும் உள்ளஒருவர் தமதுஉறவினர்என்று அவர்கள் மகிழ்ச்சி கொண்டிருக்கிறார்கள்."

# அர்ச். சூசையப்பர் பந்தியின் 51-ம் வருட அறிக்கை

யாழ்ப்பாணம், சென்வின்சென்ற் டீ போல்தருமசபை, அர்ச். சூசையப்பர் பந்தியின் 1958-ம் ஆண்டுக்கான 51-வதுவருடஅறிக்கைவருமாறு:

**அங்கத்தவர்களும் கூட்டங்களும்:** இவ்வாண்டில் எமதுபந்தியில் 29சகோதர அன்பர்கள் அங்கத்துவம் வகித்திருந்தனர். 48கூட்டங்கள் நடைபெற்றன. கூட்டங்களுக்குச் சராசரி21 அங்கத்தவர்கள் சமுகமளித்திருந்தார்கள்.

**ஞானமுயற்சிகள்:** ஆன்ம, சரீரநன்மைகள் செய்யும்பொருட்டு அங்கத்தவர்கள் வறியவர்களின் இல்லங்களுக்கு 1998முறை தரிசனையளித்துள்ளனர். ஆஸ்பத்திரிசென்று 586 நோயாளரைச் சந்தித்து, ஆறுதலான வார்த்தைகள்கூறிப் பக்திக்குரியபுத்தகங்கள், பத்திரிகைகள் வாசிக்கஉதவியுள்ளனர். சிறைச்சாலைக்குச் சமுகமளித்துச் கைதிகளைச்சந்தித்து, அவர்களுடன் கலந்துரையாடிப் புத்திமதிகள்கூறி ஆறுதற்படுத்தியிருக்கின்றனர்.

**இலவச புத்தகசாலை:** எமது பந்தியின் புத்தகசாலையிலிருந்து 95புத்தகங்கள் இலவசமாக வாசிக்கக்கொடுத்ததோடு, 815துண்டுப்பிரசுரங்கள் 480 பத்திரிகைகள் விநியோகம்செய்யப்பட்டன.

**அர்ச். அந்தோனியார் தரும அப்பக்காணிக்கை:** வழமைப்பிரகாரம் அர்ச். அந்தோனியாரின் பக்தர்கள் அவர்மூலம் தாங்கள்அடைந்து கொண்ட நன்மைகளுக்கு நன்றியாகத் தருமஅப்பக்காணிக்கை இவ்வாண்டு 2344ரூபா08சதம் அனுப்பியுள்ளனர். அவர்களின் விசேஷகருத்துகள் மேன்மேலும்அனுகூலமாகவும், அவர்கள் பெற்ற நன்மைகளுக்கு நன்றியறிந்த தோத்திரமாகவும் நாம்விசேஷவிதமாக மன்றாடிவந்துள்ளோம்.

**பிடிஅரிசித் தண்டல்:** சென்ற வருடங்களிற்போலவே இம்முறையும் எமதுபகுதியில் பிரிக்கப்பட்டுள்ள 9வட்டாரங்களுக்கும் இருவர், அல்லது மூவராக மாதாந்தம்சென்று உபகாரிகள்தந்துதவிய சிறுதொகைப்பணத்தைப் பேருவகையுடனும், நன்றியுடனும்சேகரித்து வறியவர்க்கு உதவினோம். இந்தவிதமாக இவ்வாண்டு வசூலித்தபணம் 348ரூபா47சதமாகும்.

**நத்தார் தண்டல்:** நத்தார் காலத்தில் வறியவர்க்கு விசேஷஉதவி செய்யும்பொருட்டு வழமைபோல எமதுஉபகாரிகளிடம விசேஷஉபகாரிப்புக்குச சென்றோம். இவ்வருடம் அவர்கள்தாராளமனதுடன் 823ரூபா 05சதம் தந்துதவினார்கள்.

**உபகரிப்புகள்:** இவ்வாண்டு உபகாரிகள்மூலம் கிடைத்தமுழுத்தொகை 4445ரூபா43சதம். இத்தொகை ஏனையதடவைகளிலும்பார்க்க 351 ரூபா66சதத்தால் அதிகரித்துள்ளதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். எல்லாமாகக் கிடைத்த பணத்தைக் கொண்டு45 குடும்பங்களைக் கொண்ட 157பேருக்குக் கிழமைவிதம் உதவியும், 368பேருக்குத் தருணஉதவியுமாக 2,302ரூபா58சதம் செலவு செய்துள்ளோம். இன்னும் வறியவர்களின் வீடுவேயவும், அநாதப்பிள்ளைகள் புத்தகம்வாங்கவும், நல்லூர் மீசாம், வயோதிபர்சாலை, சிறைச்சாலை, பக்திக் கூட்டங்கள் என்பவற்றிற்கும், சிறுவியாபாரம் தொடங்கவும், 384ரூபா 35சதம் உபகரித்துள்ளோம். மேலும் வறியவர்களுக்கு வஸ்திரமாகவும், அரிசியாகவும் 601ரூபா25சதம் உதவியுள்ளோம்.

**நன்றியுரை:** எமதுபந்தியின் வளர்ச்சியைவிரும்பி எம்மைஆதரித்து வரும் மகாவந். மேற்றிராணி ஆண்டகை அவர்களுக்கும், எங்களைவழிநடத்தி வரும் அதிவண. ஜே. புறோகான் சுவாமி அவர்களுக்கும், ஆசனக்கோவில் வண. கட்டளைக்குரவர் அவர்களுக்கும், பந்தியின் வாராந்தகூட்டங்களுக்குத் தவறாதுசமுகமளித்தும், தலைமைதாங்கியும், புத்திபோதனைகள்புகன்றும் எம்மை ஊக்கித்துவரும் வண. எஸ். ஜி. இலஸறிசுவாமியவர்களுக்கும், மற்றும் சகோதரபந்தியினர், உபகாரிகள், அபிமானிகள் அனைவருக்கும் எமது தாழ்மையான நன்றிஉரியதாகுக.

## வரவு செலவுக் கணக்கு 1-1—31-12-58

### வரவு விபரம்

| | |
|---|---|
| 1-1-58இல்கையிருப்பு ... | 62-51 |
| மகிமைஅங்கத்தவர்கள் ... | 658-75 |
| காரியஅங்கத்தவர்கள் ... | 43-03 |
| நத்தால் தண்டல் ... | 823-05 |
| அர்ச். அந்தோனியார் தரும அப்பக்காணிக்கை | 2,344-08 |
| தனிச்சங்கம் உதவியது ... | 150-54 |
| வேறு தருமம் ... | 10-00 |
| பிடி அரிசிக் கணக்கு ... | 348-47 |
| | 4,445-43 |

### செலவு விபரம்

| | |
|---|---|
| பணஉதவி ... | 2,302-58 |
| வஸ்திரம் ... | 499-90 |
| அச்சுச்செலவு ... | 163-00 |
| சிறுவியாபாரம் செய்ய ... | 123-50 |
| உபகாரிகள் பூசைக்கு ... | 45-00 |
| நல்லூர்மீசாமுக்கு ... | 60-00 |
| வயோதிபர்சாலைக்கு ... | 60-00 |
| வீடுவேய்வதற்கு ... | 60-00 |
| அரிசிஉதவி ... | 101-35 |
| தனிச்சங்கத்துக்கு ... | 27-00 |

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

அடுத்துவருகிற வியாழக்கிழமை (19-3-59) யேசு கைத்தாதையாகிய அர்ச். சூசையப்பருடைய திருநாள். அர்ச். சூசையப்பர் தேவசித்தத்துக்கு அமைந்து தேவமாதாவையும், திவ்வியயேசுவையும் பரிபாலித்து வந்தார். தமக்குஏற்பட்ட கஸ்திதுன்பங்களையெல்லாம் சகித்துத் தமக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட அலுவலைத் திறமையாகச் செய்துமுடித்தார். பொறுமையின் கண்ணாடியாகவும், வறுமையைச் சிநேகித்தவராகவும் சீவித்தார். தொழிலாளருக்கு மாதிரிகையாய்த் திகழ்ந்தார். தேவதாயாருடையவும், யேசுவுடையவும் கரங்களிலே மரணித்த அவர் நல்மரணச் சகாயரெனத் திருச்சபையால் கொண்டாடப்பட்டு வருகிறார்.

அந்த மகிமைநிறைந்தவருடையதினம் உங்கள் "அப்பா" தினம் என்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன். யேசுநாதரின் கைத்தாதையாருடைய தினத்தைக் கொண்டாடும்பொழுது நீங்களும் உங்கள் தகப்பனுருடைய தினமாக அதைக் கொண்டாடலா மல்லவா? அத்தினத்தை எப்படிக் கொண்டாடுவீர்கள்? அதற்கு ஒருவழி.

அன்று நீங்கள் திவ்வியபூசைகண்டு, திருவிருந்தருந்தி உங்கள் தந்தையருக்காக மன்றாடுவதே முதற்கடனாகும். உங்கள் இல்லங்களை நன்கு அலங்கரித்துப் பாடசாலையிலே நீங்கள்பயின்ற ஆடல்பாடல்களை உங்கள் அப்பாவுக்குக் காட்டி மகிழுங்கள். உங்கள் இல்லம் அன்று குதூகலமாய் இருக்கட்டும். இன்னும் உங்களில் சிலருடைய தந்தையார் வீட்டில் இருக்கமாட்டார். வெளியூர்களுக்கு உத்தியோகமாகவோ, வியாபாரமாகவோ சென்றிருப்பர். ஆகையால், அவர்களுக்கு வாழ்த்துக்கடிதங்கள் எழுதிஅனுப்புங்கள். அப்போது அவர்களும் மகிழ்ச்சியடைவார்கள்.

அண்ணா

—*—

## மறக்கமனம் வருமோ

(முன் தொடர்ச்சி)

பிறட்றிக் தன்னையிட்டு மற்றவர்கள் கஷ்டப்படுவதை விரும்பாதவர். மற்றவர்கள் காட்டும் அளவுக்குமிஞ்சிய அனுதாபமோ, அக்கறையோ அவருக்குப் பிடிக்காது. தனக்காகப் பிறர் வருந்துவதைச் சகிக்கமாட்டார். பிறருக்கு அனாவசியமான கஷ்டம் கொடுப்பதை அவர் விரும்பவில்லை. எளிமையும், திறந்த மனமும் உள்ள மனிதர் அவர். பெருந்தன்மையற்ற அவரது குணம் என்னைக் கவர்ந்துவிட்டது. தன்னோடு உடன் நோயாளிகளாய் இருந்தவர்களுக்கு உதவி செய்யத் துடிப்பார். அவர்கள் சேமத்திலே ஆவல் காட்டினார்.

ஒருநாள் பிறட்றிக்குக்கு ஆபத்தான நிலை ஏற்பட்டது. இருப்புஇருதயத்தை இயக்கிக்கொண்டுவந்த மின்சாரம் திடீரென்று நின்றுவிட்டது. செயற்கைச் சுவாசம் வாங்கிக்கொண்டிருக்கும் அவர் திடீரென ஒரு சமிக்ஞை காட்டினார். நான் சென்று அவரைக்கவனித்தபொழுது மின்சாரம் நின்றுவிட்டதைக் கண்டேன். மின்சாரத்தைச் சரிசெய்வது எப்படி? நேரமோ நடுநிசி! ஊழியர் யாவரும் அயர்ந்துவிட்டனர். தாமதித்தால் பிறட்றிக்கிற்கு உயிர்போய்விடும். மிகவும் ஆபத்தான நிலைமை. ஓடினேன் தலைமைத் தாயாரிடம். அவவும், நானுமாக ஊழியரது சயன அறைக்குச் சென்று அவரைஎழுப்பி ஆஸ்பத்திரி மனேஜரிடம் அனுப்பினோம். மனேஜர் விரைந்துவந்து மின்சாரக் கம்பிகளைக் கழற்றிப் பழுதடைந்த பாகத்தைத் திருத்துவதற்காகத் தற்காலிகமாகத் தனது "பஸ்ஸிலே" அதை இணைத்துவிட்டுப் பஸ்ஸின் மோட்டரை முடுக்கிவிட்டார். அதன்பலனாகப் பிறட்றிக்கினுடைய இருப்புச் சுவாசப்பை மீண்டும் இயங்கத் தொடங்கியது.

பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் சென்றிருக்கும். அப்பொழுதுதான் அவருக்கு அறிவு வந்திருக்கவேண்டும். மெல்லியகுரலிலே "மிஸ் பெசெக்! நீங்கள் என்னால் பெரும் சிரமப்பட்டுவிட்டீர்களே" என்றார். எனக்குக் கண்கலங்கிவிட்டது. என்னைப்பற்றியல்ல, யாரும் தனக்காகக் கஷ்டப்படுவதை அவர் விரும்பவில்லையே என்றுதான் நான் சிந்தித்தேன்.

பிறட்றிக் குடும்பத்தார் அவருக்காகச் செபம்பண்ணுவதிலே ஒருநாளும் தவறமாட்டார்கள். அன்றொருநாள் சனிக்கிழமை அருகேயிருந்த மாதாகோவிலுக்குக் குடும்பமாகச் சென்றனர், பிறட்றிக் வீட்டார். விடுமுறையாக இருந்தமையால், நானும் அவர்களோடு கூடிக்கொண்டு கோவிலுக்குச்சென்றேன். அங்கு நடந்த ஒருசிறு சம்பவம் என்னை உறுத்தியது.

அவர்கள் எல்லோரும் செபித்துக்கொண்டிருந்தனர். அவர்களுடைய மகள் மேரிக்கருகில் இருந்த அடுத்தவீட்டுச் சிறுவன் பீற்றர் அவளைச் சுரண்டிக்கொண்டும், பராக்குக் காட்டிக்கொண்டும் இருந்தான். மேரியோ அவற்றில் சிறிதும் எடுபடவில்லை. அவள் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது செபித்துக் கொண்டே இருந்தாள். பீற்றர் களைத்துவிட்டான். அவள் திரும்பி அவனோடு கதைக்கவில்லை. அவனும் விலகிக்கொண்டான். இந்தச் சிறுமியின் சம்பவம் தான் என்னையும் செபிக்கத் தூண்டியது. என்னைச் சத்தியமறையிலே சேர்ப்பித்த பல காரணங்களில் இதுவும் ஒன்று.

எனது சேவைக்காலம் முடித்து நான் வேற்றிடம்சென்றேன். மூன்று வருடங்கள் கடந்தன. 1954-ம் ஆண்டு பிறட்றிக் அவர்களின் மரணச்செய்திஅறிந்து, அவரது பிரேத அடக்கத்திற்குச் சென்றிருந்தேன்.

## எமது கலாமன்றத் தேர்தல்

சென்ற மாதம் 6-ந்திகதி அர்ச். சவேரியார் கல்லூரியில் மாபெரும் தேர்தல் போட்டியொன்று நடைபெற்றது. அன்று காலை 8 மணிபோல் எல்லா மாணவர்களும் கல்லூரி முன்றிலிலே வந்து கூடினர். எமது கல்லூரியில் இத்தேர்தல் ஒரு வியப்பை அளித்தது. முற்காலங்களில் இப்படி நடைபெற்றதில்லை. கல்லூரியின் சுவரை நோக்கினால் ஒரே தேர்தல் விளம்பரமாகவே காட்சியளித்தது. பாடசாலையின் முன் மைதானத்தை நோக்கினால் ஒரேஆரவாரம். கடமையை உணர்ந்தஅங்கத்தவர்கள் ஆவேசங்கொண்டெழுந்ததுபோல் எழுந்து, இருதரத்தினராய்ப் பிரிந்துநின்று தங்களுடைய அபேட்சகர்சார்பாய் ஆர்ப்பரித்துப் பேசினார்கள். 8-30 மணியளவில் கல்லூரி வழமைபோல் சிறுசெபத்துடன் ஆரம்பமாகி ஒன்றரை மணித்தியாலம் பாலகயேசுவின்கூட்டம் நடைபெற்றது. பின்பு 10-30 மணிபோல் மாணவர் எல்லோரும் வாக்களிப்பதற்காகத்தேர்தல் நடைபெறும் இடத்திற்குச் சென்றனர். ஒருபக்கத்தில் தேர்தல் அதிகாரிகளாக ஆசிரியர் சூசைப்பிள்ளையும், ஆசிரியர் சொய்சாவும், மறுபக்கத்தில் தேர்தல் அபேட்சகர்களான ரி. ஜே. கே. அந்தோனிப்பிள்ளையும், ஏ. எஸ். கொடித்தோரும் வீற்றிருந்தார்கள். தேர்தலும் ஆரம்பமாகி வாக்களிப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தது பாலிய மாணவர்கள் தங்கள் ஆர்வத்தைக்காட்டி வாக்காளருக்கு உற்சாகமூட்டினர். 11-30 மணிக்கு வாக்களிப்பு முடிவடைந்தது. பின்பு தேர்தல் முடிவைக் காண்பதற்காக மாணவர்கள் கல்லூரிமுன்றிலில் வந்துகூடினர். அப்பொழுது வாக்குச்சீட்டுக் கணக்கெடுப்பு நடைபெற்றது. ஒவ்வொரு வாக்குச்சீட்டாக எடுத்து வாக்காளர் பெயரும், அவர் வாக்களித்த அபேட்சகர் பெயரும் ஒலிபெருக்கியின்மூலம் யாவர் முன்னிலையிலும் கூறப்பட்டது. கடைசியில் முடிவு தெரியவந்தது ரி. ஜே. கே. அந்தோனிப்பிள்ளை அவர்களுக்கு 73 வாக்குகளும், ஏ. எஸ். கொடித்தோருக்கு 52 வாக்குகளும் கிடைக்கப்பெற்றிருந்தது. பின்பு அதிக வாக்குகளெடுத்த அந்தோனிப்பிள்ளை அவர்கள் பிரதமராகவும், கொடித்தோர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராகவும் நியமிக்கப்பெற்றார்கள். அதன்மேல் ஆசிரியர் சூசைப்பிள்ளை அவர்கள் தமிழிலும், கல்லூரி அதிபர் அவர்கள் ஆங்கிலத்திலும் சொற்பொழிவாற்றினார்கள். தொடர்ந்து புதியபிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் பேசினார்கள். பின்பு இருகட்சியிலுமிருந்து இருவர் எழுந்து அவரவர் கட்சிசார்பில் பேசினார்கள். தேர்தலின் காரணமாக அன்று மதியப்படிப்பு நடைபெறவில்லை. ஈற்றில் கடவுள் வாழ்த்துடன் எமது கலாமன்றத் தேர்தல் முடிவடைந்தது.

— ஏ. அன்ரன் பெல்டானோ

—*—

## யேசுவின் திருப்பாத்திரம்

பலவருடங்களுக்குமுன் ஆதர்என்னும் அரசனுடைய வீரர்கள் பலர் யேசுநாதர் கடைசி இராப்போசனத்தில் பானம் பருகிய பாத்திரத்தைக் கண்டுபிடிக்க ஆரம்பித்தனர். அவர்களுள் ஒருவன் அதிகம் தைரியசாலி. அவன் பெயர் லவுண்வுள்.

ஒருநாள் லவுண்வுள் குதிரையில் ஏறிப் போய்க்கொண்டிருக்கையில் அப்பாத்திரத்தைக் காட்சியிற் கண்டார். உடனே அப்பரிசுத்த பாத்திரத்தைக் கண்டுபிடிக்கும் வரையும் தான் இளைப்பாறப் போவதில்லை என்று நிர்மானம் பண்ணிக்கொண்டார். அத் நிர்மானத்துடன் இன்னும் அப்பால் சிலமைல் தாண்டிச் சென்றார். வழியில் ஒரு பிச்சைக்காரன், பார்வைக்கு மிகவும் அரோசிகமானவன் தென்பட்டான். இவரைப் பிச்சை தரும்படி கேட்டான். உடனே லவுண்வுள் முகத்தை அப்அப்புறம் திருப்பிக்கொண்டு ஒரு தங்கத்துண்டை எடுத்து அப்பிச்சைக்காரனிடம் கொடுத்து, அப்புறம் போகும்படி சொல்லித் தன் குதிரையைத் தட்டிவிட்டார். உடனே அப்பிச்சைக்காரன் லவுண்வுள் கொடுத்த தங்கத்துண்டை அவனை நோக்கியே எறிந்துவிட்டு, "உன் தங்கத்தை நீயே எடுத்துக்கொள்; அன்பற்றவர்களிடமிருந்து தங்கத்தைப் பெறுவதிலும் அன்பு, இரக்கம் உள்ளவர்களிடமிருந்து காய்ந்த றொட்டித்துண்டு ஒன்று பெறுவது நல்லது" என்று கூறினான்.

ஆண்டுகள் பல ஓடி மறைந்தன. எங்கும் தேடியும் அப்பரிசுத்த பாத்திரம் அகப்படவில்லை. அவரும் வயது சென்ற வயோதிகனாகிவிட்டார். தன் குதிரை, திரவியங்கள் எல்லாம் இழந்து இனிமேல் தேடிச் செல்ல முடியாத நிலையில் தமது மாளிகையை நோக்கித் திரும்பினார். மாளிகைக்குக்கிட்டச்சேர்ந்தபோது அங்குநின்ற பலரைக்கண்டு, "நான் தான் லவுண்வுள்" என்று சொன்னார். அவர்கள் நம்பவில்லை. அவரை நகைத்தனர். "என்ன அதிசயம்! லவுண்வுள் அநேக வருடங்களுக்குமுன் மறைந்து விட்டார். அவரது மாளிகையும் வில்லியத்துக்குக் கொடுபட்டுவிட்டதே" என்றார்கள்.

---

அப்பொழுது அவரது ஆன்மஇளைப்பாற்றிக்காகச்சொல்லப்பட்ட பூசையின்போது வண. கவனுவ் சுவாமியவர்கள் ஆற்றிய பிரிவுரை எனது உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்தது. அந்நேரம் பிறட்றிக் முன் ஒருமுறை கூறிய வார்த்தைகள் எனது ஞாபகத்தில் வந்தது. "சத்தியம் சமாதானத்தைத் தந்தது; அதுவே இவ்வுலக வாழ்வு; மோட்ச சம்பாவனை அடைவதற்கு — பேரின்பத்திற்கு ஆயத்தகளம்" என்பதையும் கற்பித்தது. வேறுவிதமாகச் சொல்வதானால், "எல்லோரையும்போல எனக்கும் ஒரு கடமை உண்டு; அதில் நின்று நான் நீங்கினவன் அல்ல" என்பதே பிறட்றிக் கூறிய அந்த வார்த்தைகள்.

— காவலூர் யோபு

அவர் அதை நம்பாமல் மாளிகைக்கு விரைந்து சென்றார். அங்கு நின்ற காவலர் அவரை வெளியே துரத்தி விட்டார்கள். லவுண்வுன் கவலையுடன் வெளியே சென்றார். உணவுக்கு ஒன்றுமில்லை. ஒரு துண்டுப் பாண் மாத்திரம் இருந்தது. அதை ஒரு பிச்சைக்காரனுக்கும் கொடுத்துத் தானும் சாப்பிட்டார். உடனே ஒரு பெரிய புதுமை நடந்தது. அப் பிச்சைக்காரனைக் காணவில்லை. யேசுநாதர் நின்றார். உடனே அவன் முழந்தாளில் விழுந்து. "ஆண்டவரே! நான் அப்பாத்திரத்தைக் கண்டடைய முடியாது போனது ஏன்?" என்று கேட்டார்.

யேசுநாதர் மறுமொழியாக: "பாத்திரம் இங்கே இருக்கிறது; யார் ஒரு பிறர்சிநேகக்கிரிகை செய்கிறாரோ, அவனுடன் நாம் இப்பாத்திரத்தில் பங்குபற்றுகிறோம்" என்றார்.

இவ் வார்த்தைகளுடன் லவுண்வுள் விழித்துக்கொண்டார். தனது குதிரை பக்கத்திலும், தான் முந்திய நிலையில் வீரனுக்குரிய உடையுடனும் நிற்பதைக் கண்டு அதிசயப்பட்டார். தான் ஒரு சோலையில் நிற்பதாகவும், இவை யாவும் தான் கனவில் கண்டவை எனவும் நினைவுகூர்ந்தார்.

இதிலிருந்து ஒரு நல்லபாடம் கற்றுக்கொண்டார். நான் என் வீட்டிலிருந்தே பிறருக்கு நன்மைசெய்து ஆண்டவரை நேசிப்பேன் என்று எண்ணினார். உடனே வீடு திரும்பினார். ஏழை எளியவர்களுக்கு உதவி செய்து, அவர்களுடைய சிநேகிதன் ஆனார். இப்போதான் லவுண்வுள் உண்மையான திருப்பாத்திரத்தைக் கண்டுபிடித்தார்.

# கோட்டுவிற்பனவு விளம்பரம்

## இல. M. B. 1313

### யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

யாழ்ப்பாணம், பெரியகடை

வீரகத்திப்பிள்ளை இராசசேகரம் — வழக்காளி.

பருத்தித்துறை

1. விநாயகமூர்த்தி மயில்வாகனம், 2. வடியூர் பருத்தித்துறை பஸ்கம்பெனி, 3. யாழ்ப்பாணம் றொதேன் ஓம்னிபஸ்கம்பெனி, யாழ்ப்பாணம் றேட் அன் ரூன்ஸ்போட் கம்பெனி (போக்குவரத்துக் கம்பெனி) — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1313-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் பஸ்கம்பெனிப்பங்குகளை 16-5-59 சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 6,296-உம், 5-11-56 தொடக்கம், 20-3-56 வரைக்கும் ரூபாய் 5,000-த்திற்கு 9வீதவட்டியும், அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 400-உம். இதில் ரூபா 300 குறைக்கப்பட்டது.

### ஆதன விபரம்

மேலேசொல்லப்பட்ட 1-ம் எதிரியின் இதில்சொல்லப்பட்டஉரித்துக்கள்சகலதும்.

(a) 1943-ம்ஆண்டு பங்குனிமாதம் 1-ம்திகதியில் ஸ்தாபிக்கப்பட்ட பருத்தித்துறை-யாழ்ப்பாண பஸ்கம்பெனி சேட்டிபிக்கற்இலக்கம் 13,150. சாதாரண பங்குகள் இலக்கம் 1801 தொடக்கம், 1950 முடிய

(b) 1944-ம்ஆண்டு பங்குனிமாதம் 31-ம்திகதியில் ஸ்தாபிக்கப்பட்ட பருத்தித்துறை-யாழ்ப்பாண பஸ்கம்பெனி சேட்டிபிக்கற் இலக்கம் 48,120. சாதாரணபங்குகள் இலக்கம் 5791 தொடக்கம், 5810 முடிய. 6531 தொடக்கம், 6550 முடிய 7271 தொடக்கம், 7279 முடிய. 8011 தொடக்கம், 8030 முடிய. 8751 தொடக்கம், 8770 முடிய. 9491 தொடக்கம், 9510 முடிய.

(c) 1946-ம்ஆண்டு பங்குனிமாதம் 31-ம்திகதியில் ஸ்தாபிக்கப்பட்ட பருத்தித்துறை-யாழ்ப்பாண பஸ்கம்பெனி சேட்டிபிக்கற் இலக்கம் 85,184. சாதாரணபங்குகள் இலக்கம் 10381 தொடக்கம், 10410 முடிய. 11781 தொடக்கம், 11800 முடிய. 12221 தொடக்கம், 12240 முடிய. 13021 தொடக்கம், 13040 முடிய. 13541 தொடக்கம், 13560 முடிய. 14541 தொடக்கம், 14560 முடிய. 14921 தொடக்கம், 14940 முடிய. 15781 தொடக்கம், 15800 முடிய. 16295 தொடக்கம், 16308 முடிய.

(d) 1947-ம்ஆண்டு பங்குனிமாதம் 31-ம்திகதியில் ஸ்தாபிக்கப்பட்ட பருத்தித்துறை-யாழ்ப்பாண பஸ்கம்பெனி சேட்டிபிக்கற் இலக்கம் 121,86. சாதாரணபங்குகள் இலக்கம் 17031 தொடக்கம், 17050 முடிய. 17691 தொடக்கம், 17700 முடிய. 18381 தொடக்கம், 18400 முடிய. 19041 தொடக்கம், 19065 முடிய. 19698 தொடக்கம், 19708 முடிய.

(e) வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறை கோயிற்பற்று, பருத்தித்துறையில் ஸ்தாபிக்கப்பட்ட பருத்தித்துறை-யாழ்ப்பாண பஸ்கம்பெனி ரூபா 7,400 பெறுமதியான 200 சாதாரண பங்குகளுக்குரிய சேட்டிபிக்கற் கொடுக்கப்படவில்லை.

(f) வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று. வண்ணார்பண்ணை கிழக்கில் 1944-ம்ஆண்டு தைமாதம் 31-ம்திகதியில் ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணம் றொதேன் ஓம்னி பஸ்கம்பெனி சேட்டிபிக்கற் இலக்கம் 3. ரூபாய் 10,180 பெறுமதியான 1018 சாதாரணபங்குகள் இலக்கம் 5069 தொடக்கம், 6086 முடிய.

(g) வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை கிழக்கில் 1948-ம்ஆண்டு மார்கழிமாதம் 22-ந்திகதியில் ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணம் றேட் அன்ட் ரூன்ஸ்போட் கம்பெனி (போக்குவரத்துக் கம்பெனி) சேட்டிபிக்கற் இலக்கம் 21,50. சாதாரண பங்குகள் இலக்கம் 1026 தொடக்கம், 1075 முடிய. பங்கு ரூபா 5,000. வீதம் ரூபா 22,580. அசைவுள்ள, அசைவற்றவைகள் $\frac{5}{91}$ என்ற இலக்கத்தில் யாழ்ப்பாணக் காணிப்பதிவகத்தில் பதியப்பட்டது

R. Kanagaratnam.
Commissioner & Valuer.

No. 35, Chundikuli, JAFFNA.

● வாத்துகளோ அல்லது வெண்கொக்குகளோ நீரில்மூழ்கியெழுந்தவுடன் அவற்றின் உடலில் ஓர் துளி தண்ணீர்தானும் ஒட்டிக்கொண்டிருப்பதாகக் காணப்படுவதில்லை. காரணம், அவற்றின் உடலின்மேலே ஓர்வகை எண்ணெய்ப்பசை இருப்பதேயாகும்.

● லோகப்பொருள்களிலெல்லாம் அதிகம்கெழித்தக்க அல்லது கம்பியாகநீட்டத்தக்கது பொன்னேயாகும். ஒரு அவுன்ஸ்பொன்னைத் தொடர்ச்சியான ஓர் நூல்கம்பியாக இழுத்தால் 51மைல்களுக்கு நீட்டக்கூடியதாயிருக்கும்.

### நோய்களின் விபரம்

நீரிழிவு, சன்னி, தொய்வு, இஸ்திரீபாவாய்வு, காசம், குன்மம், சயரோகம், உருக்குநோய், புற்றுநோய், கெற்பச்சிதைவினால் ஏற்படும் ரோகங்கள் முதலியவைகளுக்குச் சிகிச்சை பெற எம்மிடம் கலந்து ஆலோசியுங்கள்.

உங்கள் சுகவாழ்வே எமது சேவையின் இலட்சியம்.




## கோட்டு விற்பனவு விளம்பரம்

### இல. M. B. 1889

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்

யாழ்ப்பாணம் நம்.3, 2-ம்குறுக்குத்தெரு
1. அல்பிறட் செல்வத்துரையும்,
2. பெண் மாகிறேற்றும்
— வழக்காளிகள்.

எதிராக

யாழ்ப்பாணம், அச்சியடி
1. மாரிமுத்து சதாசிவமும்,
2. பெண் நல்லம்மாவும்.
அநுராதபுரம் புகையிரதநிலையம்
3. முருகர் சபாபதி.
அரியகுளம், நம். 20, பலாலிறோட்
4. மனைகையற்கரசி — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1889-ம இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1959-ம் ஆண்டு சித்திரைமாதம் 17-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 7,218-உம், இன்னும் ரூபா 6,000-த்திற்கு 17-10-57-தொடக்கம், 16-1-58 வரையும் 100-க்குப் 12%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 300ரூபா 55சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று, வண்ணார்பண்ணை கிழக்கு இறை "அச்சியடியும், மருபிரிவும்" பர. நில. இலா. இரண்டும் (ப. நி. இ. 2), கல்வீடும், கிணறும், செய்பயிர் வாளைபயிர்களும். எல்லை: கிழக்கு — முருகேசு சின்னையாவுடைய ஆதனம். வடக்கு — இளையதம்பி பெண் வள்ளிப்பிள்ளைக்கும், மறபேருடைய அதனமும். மேற்கு — தாமோதரம்பிள்ளை வயித்திலிங்கமும், பெண் ஞானம்மாவுமுடைய ஆதனம். தெற்கு — ஒழுங்கை. தற்போது றோட்டு இது முழுவதிலும் மேற்சொல்லிக் காணிக்காரருக்குரிய சொல்லப்பட்ட கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புஉரித்தும், அக்கிணற்றில்இருந்து மேற்சொல்லிக்காணிக்குப் போகிறபாதையில் ஆறஅடி அகலம்கொண்டபாதை புறநீங்கலாக.

நி. ந. ஆசீர்வாதம்,
கொம்மிஷனர்.

நம். 21, 2-ம்குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.
7-3-59

### நன்றியறிதல்

பரிசுத்த சதாசகாயமாதாவின் மன்றாட்டாலும், அர்ச். அந்தோனியாரின் புதுமையாலும் நான் கேட்டுக்கொண்டபடி என்மகளுக்கு நல்லசுகம்கிடைத்தமையிட்டுநாலும், என்றுடும்பமும்எழியுள்ள காலமும் நன்றியுள்ளவர்களாக இருப்போம். இன்னும் எங்கள்குடும்பத்தை ஆசீர்வதிக்கவேணுமென்று உங்களைமன்றாடுகிறோம்.

பி. செல்வம் குலாஸ்
மன்னார்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### இல. M. B. 1566

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்

கரையூர் தற்காலம்
1. கொழும்பு ஜி. கே. ஆபிரகாமும்,
2. பெண் மெற்றில்டாவும்
— வழக்காளிகள்.

எதிராக

1. கரையூர் செபஸ்தி யோசேப்பும்,
2. பெண் சேயம்மாவும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1566-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1959-ம் ஆண்டு சித்திரைமாதம் 21-ந் திகதி (21-4-59) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 6,833-34-உம், இன்னும் அதற்கு 30-3-57 தொடக்கம், 25-7-57 வரையும் 100-க்குப் 12% வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 291ரூபா 50சதமும். இதில் தொலவைகையில் ரூபா 150கொடுபட்டது. ரூபா 3,000 கோட்டில் கட்டப்பட்டது. இன்னும் ரூபா 319 சதம் 06 தவணைக் கட்டப்பட்டன.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோயிற்பற்று கரையூர்இறை, "சேவியர் குளத்து வளவு" பர. நில. இலா. 3 குளி 14-உம், வீடும், பற்றும் வாளைபயிர் செய்பயிர்களும். எல்லை: கிழக்கு — பிறான்சிப்பிள்ளை சீமான்பிள்ளையினதும், பெண் ஞானம்மாவினதும் ஆதனம். வடக்கு — ஜே. சி. ஜெபராஜசிங்கத்தினதும், பெண்ணினதும் ஆதனம். மேற்கு — இரத்தினசிங்கத்திற்கும், மறபேருக்குமுரிய ஆதனம். தெற்கு — அஸ்பத்திரி கச்சேரிறோட். இது அடங்கலும், இதைச் சேர்ந்தவைகளும்.

தா. செல்லையா,
கோமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 37, கொழும்புத் துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், 9 3-59.

### விளம்பரம்

யாழ்ப்பாணம், 1-ம் குறுக்குத்தெருவில் 37-ம் இலக்கத்திலிருக்கும் பல்வைத்தியசாலை திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில்மட்டும் திறந்திருக்கும்.

ஜே. இருக்கம்புரு.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

இற்றைக்கு இரண்டுவருட காலமாக எனதுமகன் சுகமில்லாதிருந்தார். வைத்தியசிகிச்சைகள் பலனளிக்கவில்லை. ஈற்றில் முத்திப்பேறுபெற்ற லிபர்மன் அவர்களை இரந்துமன்றாடினேன். மன்றாட்டுக் கேட்கப்பட்டது. மகன் குணமடைந்தான். அவருக்கு எனது தாழ்மையான நன்றி.

தாழ்வுபாடு Mrs M. டலிமை

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 12-1959.